[illegible] 1922-23

പുസ്തകം 13 ലക്കം 10

RG5m21/M11 10
1923.13.10.
186729

ரெஜிஸ்தர் எம். 916.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

வேதாந்த விசாரம் செய்யும்

ஓர் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை.

நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.,
பத்திராதிபர்.

ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்யதர்சி.

2 6 MAY 1924

ஸபையின் 1922—1923ஞு ஜூலைமீ.

ஸம்புடம் 13.] ருத்ரோத்காரிஞு ஆடிமீ [ஸஞ்சிகை 10.

1. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 335

2. காமமும் மோக்ஷமே மோக்ஷமும் காமமே.
ஸை. ஸ்ரீநிவாஸாசார்யர். ... 346

3. ஸதாசார நிஷ்கர்ஷம்.
காடந்தேத்தி. கோபாலாசார்யர். ... 352

4. ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தமும் வைதிகமர்யாதை நிரைவும்.
வேளுக்குடி. சேஷாத்திரியாசார்யர். ... 357

5. ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம். ... 363
பண்டித பூஷணம் வித்வான் சே. நரஸிம்மாசாரியர்.

6. இரண்டாந்திருவந்தாதி.
வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ... 367

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால்
ப்ரசுரம் செய்யப்பட்டது.

மதராஸ்: கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

வருஷசந்தா ரூ. 3—0—0] [ஸஞ்சிகை 1 அணா4.

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை,

# திருவாரூர்.

## ஆறுவது வார்ஷிக மஹோத்ஸவம்.

நிகழும் ருத்ரோத்காரி௵ ஆடி௴ 14௳ (29—7—1923) ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு திருக்கண்ணபுரம் ஸ்ரீ பெருமாள் ஸந்நிதியில் மேற்படி ஸபை கூடி இந்த ஸபையின் ஆறுவது வார்ஷிக மஹோத்ஸவம் நடைபெற்றது.

அன்று காலை 8-மணி முதல் 11-மணி வரையிலும், மாலை 3-மணி முதல் 6-மணி வரையிலும் ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு ஸ்வாமிபெருமாள் என்கிற சங்கராசார்ய ஸ்வாமியின் அக்ராசனத்தின் கீழ் அடியிற் கண்டிருக்கிற ஸ்வாமிகளாலும் அபூர்வமான உபந்யாஸங்கள் நடைபெற்றன.

ஸ்ரீ. உ. வெ. திருக்கண்ணபுரம் ஸ்ரீநிவாஸய்யங்கார்,
" வேளுக்குடி சேஷாத்ரியய்யங்கார்,
" காடக்தேத்தி கோபாலாச்சார்யர்,
" காரப்பங்காடு வெங்கடாச்சார்யர்,
" மன்னார்குடி ஸ்ரீநிவாஸாச்சார்யர்.

[illegible] T. ஸ்ரீநிவாஸய்யங்கார்.

திருவாரூர்.
19—7—23.

காரியதரிசி.

## மஹாவாக்ய ரத்நப்ரபாவளி.

தெலுங்கு அக்ஷரத்தில் அச்சிடப்பட்ட இந்தப் புஸ்தகத்தில் அத்வைத மதத்துக்கு உபகாரகமான நூற்றெட்டு உபநிஷத்துக்களிலுள்ள மஹாவாக்யங்களும் அதற்குத் தெலுங்கில் அர்த்தமும் தாத்பர்யமும் விசதமாய் எழுதப்பட்டிருக்கின்றன. அத்வைத தர்சனத்தின் ஸ்வரூபத்தை ஸுலபமாய்த் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு இது மிகவும் உபயோகமாகும். இந்த க்ரந்தம் பூர்வாச்ரமத்தில் வேம்படி [illegible] ஸங்கலனம் செய்தென்றும் பிறகு ஸதானந்தேந்த்ர ஸரஸ்வதி என்னும் யதீச்வரரால் [illegible] அச்சாபீஸில் பிரசுரிக்கப்பட்டு, வேம்படி ஸ்ரீதரசாஸ்திரிகளால் வதூரிலுள்ள ராமா அச்சாபீஸில் பிரசுரிக்கப்பட்டது. இதன் விலை ரூபாய் 1 0 0

## யஜுருபாகர்மம்.

சுக்ரன் ஆடி௴ 28௳ முதல் புரட்டாசி௴ 18௳ முடிய ஸூர்யஸாந்நித்யத்தால் மௌட்யதோஷ அஸ்தங்கதோஷத்தை அடைந்துச் ச்ராவண பாத்ரபத பூர்ணிமாக்கள் இரண்டும் தோஷத்தை அடைந்திருப்பதால் ப்ரதமோபாகர்மத்தை ஆடி௴ பௌர்ணிமையிலும் செய்யவேண்டாவது முதலான மற்ற உபாகர்மங்களை ஆவணி௴ பௌர்ணிமையிலும் செய்யவேண்டுமென்று (தசநிர்ணயம் என்னும் க்ரந்தத்தின்படி) ஸ்ரீ. உப. வித்வான் பகவதவிஷயம் பண்டிதபூஷணம் சேட்டலூர் நரஸிம்மாசார்யஸ்வாமியால் நிஷ்கர்ஷிக்கப்பட்டதை சில மெம்பர்களுடைய வேண்டுகோளின்படி ஸகல ஜனங்களுக்கும் தெரியும்பொருட்டு பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே ஆடி௴த்திலே சிலர் செய்திருந்தாலும் அவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ளும்பொருட்டு ஆவணி௴த்திலும் செய்யவேண்டியது அவச்யம்.

காரியதரிசி.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.

கார்யதர்சி:—ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 13] ருதிரோத்காரி௵ ஆடிமீ [ஸஞ்சிகை 10

“ த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா”

[ஸ்ரீ பாகவதம்-1-9-33.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

வேற்றுமையும் ஒற்றுமையும் மனிதர் இயல்பிலேயே உள்ளவை. எத்தேசத்திலும் எக்காலத்திலும் எவ்விதபேதமும் இல்லாமல் மனித ஸமூஹம் வாழ்ந்த தென்பதைக் காணேம். பலவேற்றுமைகளுக் கிடையே பொதுவாயிருக்கும் ஆகாரங்களைத் திரட்டி அவை மூலமாக ஒன்று கூடுவதுதான் ஸஹஜம். இதுதான் நிலைக்கத்தக்க ஒற்றுமையின் தத்வம். எல்லோரையும் ஒரு மாதிரியாக ஆக்கிவிடமுடியாது. உலகவாழ்க்கையில் அவரவர் தமக்குத் தோன்றியபடியே செய்து நடக்கவு மமையாது. உலகத்தை வெறுத்த துறவிக்கும் பிறரை அபேக்ஷிக்கவேண்டிய கார்யங்களிருக்கின்றன. இதை யநுஸரித்தே ‘மஹாஜநோ யேந கத: ஸ பந்தா:’ (மஹாஜநங்கள் நடந்த வழியே நமக்கும் வழி என்றுபதேசிக்கப்பட்டது.

இதில் வைதிக ஸம்ப்ரதாயத்தைப் பின்பற்றும் ஆஸ்திகர்களுக்கு உள்ள விசேஷம், ஸர்வஜீவர்களும் பகவானுக்குச் சரீரபூதர்களும் தாஸபூதர்களுமானதால் அவர்கள் விஷயத்தில் தாம் அநுகூலர்களாகவே இருக்கவேண்டுமென்னும் அறிவும் தீர்மானமும். இத்துணிவுள்ளவர்களுக்குப் பிறர் கொள்கை



186729

களிலாவது நடவடிக்கைகளிலாவது குற்றம் புலப்படாது; ப்ரஹ்லாதர் முதலியவர்களுக்குப் போல் இவர்களுக்கும் நிற்கின்றதெல்லாம் நெடுமாலாகவே தோன்றும். ப்ரதிகூலத்திலிழிப்பவர்களை நோக்குங்கால் அவர் திறத்தில் இவர்கள் ஐயோவென்ற இரக்கத்துடன், அவரைக் கைகொடுத்துக் கரையேற்றும் ஸமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். இத்தகைய தைவகுணத்தைப் பரப்பி அதன் வழியாய்ச் சேதநர்க்குள் சிறந்த ஐகமத்யத்தை வளர்த்தப்பார்ப்பார்கள். இதன் ப்ரயோஜனம்; தமக்கும் பிறர்க்கும் வரக்கூடிய அழிவில்லாப் பேருகிய மோக்ஷஸாம்ராஜ்யமும, அதற்குப் பூர்வாங்கமாக இவ்வுலகில் நடக்கும் கோதற்ற வாழ்வுமே. 'அன்பினாலேயே பிறரை ஜயிக்கவேண்டு'மென்னும் நீதிக்கும் இதுவே போருள்.

இப்படி பகவத்சேஷத்வ ஜ்ஞாநத்தால் நாம் ஒருமித்து வாழ்ந்து உய்யும் பொருட்டே வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநங்களை விதிக்கும் சாஸ்த்ரங்கள் பரமகாருணிகனான ஸர்வேச்வரனால் ப்ரவர்த்திப்பிக்கப்பட்டன. ஆனதுபற்றியே சாஸ்த்ரம் ஆயிரக்கணக்கான தாய்தந்தையரைக்காட்டிலும் நம்மிடத்தில் வாத்ஸல்யமுள்ளது என்று புகழப்பட்டது. மனு யாஜ்ஞவல்க்யர் முதலிய மஹர்ஷிகள் இவ்வநுஷ்டான ப்ரகாரங்களை விரித்தபடிகளில் ப்ராம்மணர்கள் நாளிதுவரையில் ஸாத்தியப்பட்ட வரையில் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவற்றின் ப்ரதான அம்சங்களில் ஒருவித வேற்றுமையுமில்லை. ப்ராம்மண ரூபத்துக்கமைந்த சிகாயஜ்ஞோபவீதாதி தாரணம், அவர்களுடைய அழிவற்ற ஆத்மஹிதத்துக் குறுப்பான வைதிக ஸம்ஸ்காரங்கள் (அதாவது கர்ப்பாதானம் தொடக்கமாய் தஹநபர்யந்தமென்று ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டவை) முதலியவற்றில் ஒருவித வேற்றுமையும் கிடையாது. இவ்வநுஷ்டானங்களினுடையவும் அதன் மூலமான ஆஹார நியமாதிகளுடையவும் பலனாக ப்ராம்மணர்கள் சாந்தி, தாந்தி, வைராக்யம், ஆஸ்திக்யம் பொறுமை, த்யாகம் முதலிய ஆத்மகுணபூர்த்தி, ரோகமற்ற சரீரம், குறுக்கமற்ற புத்தி இவைகளை உடையவர்களாய் உலகமே வியக்கும்படியான நிலைமையில் தங்கள் ஸ்வரூபத்தைக் காப்பாற்றி வந்தார்கள். தத்வ விசாரத்திலும் அஸாதாரணமான மேன்மையைப் பெற்றார்கள். ஸ்ரீசங்கர பகவத்ராமானுஜர்கள் இதற்கு உதாஹரண பூதர்கள். இவர்களுடைய உபதேசங்களில் தத்வார்த்தங்களைப் பற்றிய வித்யாஸங்களுண்டேயாகிலும் வைதிககர்ம அநுஷ்டானத்தைப்பற்றிய அபிப்ராய பேதத்தை ஒருவரும் கண்டிலர். இருவரும் பூர்ணமான வைதிக நிஷ்டையையுடையவர்கள். ஸ்ரீசங்கர் ஸ்ரீவிஷ்ணுவையே பரதேவதையாக அங்கீகரித்தவர். வேதாந்தார்த்த விசாரத்திலும் இவர் ஒப்பிய வ்யாவஹாரிக தசைக்கும் நமது மதத்துக்கும் வித்யாஸமில்லை. அவரைப் பின்பற்றிய அத்வைதாசார்யர்களு மப்படியே காணப்படுகிறார்கள். வைதிக ரூபமான ஸ்ரீவிஷ்ணு ஆராதனம் தான் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. தற்காலத்தில் ஸ்ரீசங்கர மதாநுஸாரிகள்



செய்துவரும் பஞ்சாயதன பூஜையாவது ஸ்ரீவித்யை என்னப்பட்ட தேவீபூஜையாவது, நாமறிந்த மட்டில், ஸ்ரீசங்கர பகவத்பாதாசார்யரால் அநுமதிக்கப்பட்டதாகக் காணோம். ஸ்ரீதேசிகன் உள்பட நம்மாசார்யர்களும் ஸ்ரீசங்கர மதாநுஸாரிகளிடத்தில் வைதிகாசார விரோதமிருப்பதாக எங்கும் சொல்லவில்லை. ஸ்ரீதேசிகன் காலத்தில் புதியதாய் சங்கசக்ராங்கனத்தைப்பற்றி மட்டும் விவாதம் கிளம்பியதாக அவருடைய ஸச்சரித்ர ரக்ஷை என்னும் க்ரந்தத்தால் ஏற்படுகிறது. சங்கசக்ராங்கனவிதியை நிரூபித்துவிட்டுப் பொதுவாய் வைதிகாசாரங்களைப்பற்றிப் பேசுங்கால், அதிவிஸ்தாரமான அவ்வாசாரங்களில் ஸந்த்யாவந்தனம் யக்ஞோபவீததாரணம் முதலிய சிலமட்டும் எங்கும் பொதுவாய் அநுஷ்டிக்கப்படுவதும், வேறு சில தர்மங்கள் காலதேசாதி வைகுண்யங்களால் வேறுபடுவதும் ஸம்பாவிதமென்பதும் நிவ்ருத்திசெய்ய முடியாததென்றும் அருளிச்செய்திருப்பதைப் பார்த்தால், வைதிக தர்மானுஷ்டான ப்ரயுக்தமான ப்ராம்மண்யமும் அதில் ஒற்றுமையும் எப்படியிலாவது காப்பாற்றப்படவேண்டிய ஆவச்யகதையை அவர் திருவுள்ளம் பற்றினார் என்பது விளங்குகிறது.

இவற்றையும், காலதேச வர்த்தமானங்கள் நடக்கும் ப்ரகாரங்களையும் கணிசிக்கும்போது ப்ராம்மணர்களாகிய த்ரிமதஸ்தர்களும் தம் முன்னோர்களின் பொதுவான சித்தவ்ருத்தியைக் கைக்கொண்டு தம் புராதன தனமாகிய சுத்த வைதிகாசாரங்களில் விச்வாஸத்தையும், அதன்மூலமாக பகவத்ப்ரீதிகாரமும் தமக்கு ச்ரேயஸ்கரமுமான பாஸ்பர அநுகூலரூபமான ஒற்றுமையையும் பெருக்கக் கடன்பட்டவராகிறார்கள். இதுதான் ஸாத்யமாய் பயனுள்ளதாவது. மற்று, நுட்பபுத்தியினால் சாஸ்த்ரங்கொண்டே நிர்ணயிக்க வேண்டிய தத்வவிஷயங்களில் மஹான்கள் செய்திருக்கும் அர்த்தவிசாரங்களில் நாம் புதிதாகத் தாத்பர்யம் கற்பித்து ஒற்றுமை காணப் பார்ப்பது வீண் ச்ரமந்தான். பெரியோர் உக்திகளை நாம் மாற்றும் தோஷம் ஸம்பவிக்கும். மதவிஷயங்களில் தம்முன்னோர்களின் கொள்கைகளையே ஆதரிப்பதும், பிறர்சொல்லும் யுக்திவாதங்களினால் ஒருபடியாலும் திரும்பாதிருப்பதும் மனித ஸ்வபாவங்கள். இதைமாற்ற எத்தனிப்பது மனஸ்தாபத்தில் தான் முடியும். தன்னிடமும் ஆக்ரஹம் பெருகும்.

* * * * *

ஸ்ரீரங்கத்தில் ஆங்கிலத்தில் ப்ரசுரமாகும் ஹிந்து ஸந்தேசம் (Hindu Message) பத்ரிகையின் சென்ற ஏப்ரல்மீ த்திய ஸஞ்சிகையில் இதற்கு இரண்டு உதாஹரணங்களைக் காணலாம். சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜ் ஸம்ஸ்க்ருத அத்யக்ஷர் ப்ரும்ம ஸ்ரீ. குப்புஸாமிசாஸ்த்ரிகள் எம். ஏ அவர்களும், திருச்சி ஹை. கோ. வக்கீல எ. வி. கோபாலாசார்யர் எம். ஏ. ஸ்வாமியும் அதிலெழுதியிருக்கும் வ்யாஸங்களைக் குறிப்பிடுகிறோம். அதில் சாஸ்த்ரிகள் ஸ்ரீ

பாஷ்யகாரர் ஸ்ரீசங்கரமதத்தை விமர்சித்திருக்கும் முறைமையை யோசித்தார். கோபாலாசார்யர் ஸ்வாமி ஸ்ரீசங்கரமதமும் பகவத்ராமானுஜமதமும் ஸங்கிக்கும் இடங்களைப் பரிசீலித்தார். இரண்டு மதஸ்தர்களுக்குள்ளும் ஐகமத்யம் பெருகவேணுமென்று இவ்விருவர்களுடையவும் நோக்கம் போலும். சாஸ்திரிகள் ஸ்ரீபாஷ்யத்தில் முதல் அதிகரணத்தின் பூர்வபக்ஷ ஸித்தாந்தங்களை ஆலோசித்து “தத்வவிசாரம், தர்க்கஸஞ்சாரம், இயற்கையான அழகு என்பவைகளைப்பார்க்கும்போது அத்வைதஸித்தாந்தமே ஸரியானதென்று ஸ்ரீராமானுஜர் நன்றாய் உணர்ந்தார். அவர் மிகவும் ப்ராமணிகரான தத்வவாதியானமையால் சங்கரதர்சனத்தைக் கண்டிக்குமிடங்களிலும் இதை மறக்கவில்லை. ஆனாலுமேயே அவர் வேதாந்த உபநிஷத்துக்களுக்குத் தனியாகப் பூர்ணமான பாஷ்யம் எழுதும் நிர்பந்தத்திலிருந்து தம்மை மீட்டுக்கொண்டார். அதை எழுதாததே அவர் நல்லறிவைக்காட்டுகிறதென்று எண்ணுகிறேன். அத்வைதத்தையே நிரூபிக்கும் உபநிஷத்துக்களுக்கு அதற்கு—விபரீதமாய் அர்த்தம் பண்ண அவர் ஸம்மதிக்க மாட்டாரே” என்று தீர்மானித்தார்.

இங்கிலீஷ்பத்ரிகைகளை வாசிப்பவர்கள் வெகுவாய் சாஸ்த்ர பரிசயமில்லாதவர்கள். ஏதோ விதேசத்தவர்களும் விமதஸ்தர்களும் தங்களுக்கு ருசித்தபடி சொல்வதைக்கேட்டு நமது பூர்விக மதத்தை அறியப் பார்ப்பவர்கள். அர்த்தமில்லாமல் நிரம்ப எழுதி புத்தியைக் கலக்க இங்கிலீஷ்பாஷை வெகு நல்ல கருவி. எனவே சாஸ்திரிகளைப் போல் லௌகிகப் பதவிகளையுடையவர்கள் பத்ரிகைகளில் இஷ்டப்படி எழுதத் தட்டில்லை. எழுதியதை ஆக்ஷேபிப்பவர்களும் கிடையாது. ஆனால் நம்மவர்கள் அவ்வாகர்ஷகங்களில் அகப்பட்டு விடக்கூடாது. சாஸ்திரிகள் யுக்திகளை சாஸ்த்ரபரிசயமுள்ளவர்கள் மிகவும் எளிதாய் நிராகரித்து விடுவார்கள். இங்கு குறிப்பிடவேண்டியது ஒன்றுதான். அவர் சொல்லும் ஒற்றுமையை ஒப்புக்கொண்டால் ஸ்ரீபாஷ்யகாரர் ப்ராமாணிகரல்ல, பிரட்டுக்காரர் என்றேற்படும். மிகவும்யோக்யர் என்று சாஸ்திரிகள் எவ்வளவு அழுத்தமாய்ச் சொன்னாலும் ஒருவரும் கேளார்! தம் நம்பிக்கையொன்று பிறர்க் குபதேசிப்பது, வேறு என்றால் அந்த ராமானுஜரை நம்பியா கடைத்தேறுவது ?!

நிற்க, உபநிஷத்துகள் அத்வைதத்தையே சொல்லுகின்றனவென்று அறிந்ததால் உடையவர் அவைகளுக்குப் பூர்ணமான பாஷ்யம் எழுதவில்லையென்றது சாஸ்த்ரிகளுக்கு ஸ்ரீபாஷ்யகாரர் திவ்யஸூக்திகளில் ப்ரவேசக்குறைவையாவது, விபரீத ப்ரதிபத்தியையாவது மட்டும் காட்டும். இல்லாவிட்டால் இப்படிமொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடும்கணக்கில் இரண்டுமதங்களுக்கும் ஸாமரஸ்யம் பண்ணத்துணிவாரா? சாஸ்த்ரிகள் தீர்ந்த அத்வைதியென்றேற்படுகிறது. ஸ்ரீபாஷ்யகாரரை ஆதரிக்கக் கட்டுப்பட்டவரல்ல. அவர் ஆதரணை நம்மவரும் கோறவில்லை. எனவே அவரை இங்கு விடுவோம்.

* * * * *



பகவத்ராமானுஜ ஸ்ரீசங்கரமதங்களிரண்டிலும் விசேஷபரிச்ரமம் பண்ணியிருப்பதாய்ச் சொல்லும் ஸ்ரீ கோபாலாசார்யர் ஸ்வாமிஎழுதியதைப் பார்ப்போம். ‘ராமானுஜர் அத்வைதத்தைத்தான் சொல்லுகிறார். ஆகையால் எங்கள் வழிக்குவாருங்கள்; ஒன்றாய்விடலாம் என்கிறார் சாஸ்த்ரிகள். நமதுஸ்வாமியோவென்றால் நம்மவர்கள் அதற்கு ஒப்பாததற்குச் சீறுகிறார்! ‘ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸஹ்ருதயராயும், ஆழ்ந்த விரோதபுத்தியாகிய அந்தகாரத்தினால் மூடப்படாமலும் (who has a heart and is not clouded with deep seated prejudice) இருந்தால்மட்டும், ஸ்ரீசங்கரர் பக்தி உபாஸநங்களைப்பற்றிச் செய்த உபதேசங்களினுடையவும், அவருடைய அழகிய பாஷ்யத்தில் நிரம்பிய நிருபாதிகமான சுத்தியையும் (absolute purity) பக்திப்ரகர்ஷத்தையும் ஹார்த்தமாக அநுபவிக்கமுடியும்’ என்று தமது வ்யாஸத்தின் இறுதியில் கூறினர்! பிறர்நம்மை அங்கீகரிப்பதற்காக நம் கொள்கைகளைக் கொஞ்சம் விட்டுக்கொடுக்க வேண்டும் என்பவர்களின் கோஷ்டியில் இந்தஸ்வாமியும் சேர்ந்தவராகக் காணப்படுகிறார்! ‘பகவானே ஆசார்யன் வடிவைக் கொள்கிறார்’ என்றசாஸ்ரத்தைச் சொன்னார். ஆனால் அவர்களுடைய ஸூக்திகளை அவற்றிற்கு நேர்விரோதமான உக்திகளோடு ஸாமரஸ்யம் பண்ணப்புறப்பட்டுவிட்டார்! தமது பதவியையும் வித்தையும் காரணமாகக்கொண்டு இவர் நம்பூர்வாசார்யர்களைப்பற்றிச் சொல்வதை நம்மவர்கள் பின்பற்றக்கூடுமே. அதனால் என்ன ப்ரத்யவாயம் வருமோ என்பதை யோசித்ததாகக் காணப்படவில்லை. இரண்டு ஸித்தாந்தங்களினுடையவும் ஸங்கதியை இவர் நிரூபிக்கும்படியைப் பார்ப்போம்.

ப்ரபஞ்சமும் ப்ருஹ்மமும் வேறுபட்டவையல்ல (அநந்யம்) என்பது வேதாந்தத்தின் அஸ்திவாரமான கொள்கை. ப்ரபஞ்சம் பகவானுக்குச் சரீரமாயிருப்பதால் அது அவனைவிட்டுப் பிறிக்க ஒண்ணாதது; எனவே ப்ரபஞ்சம் ப்ருஹ்மத்தைவிட வேறானதல்ல என்று ஸ்ரீபாஷ்யகாரர் வ்யாக்யானம். இப்படி யன்றாகில் ப்ரபஞ்சம் வேறு ப்ருஹ்மம் வேறு என்பது முதலான அநேக ஸ்ருதிகளுக்கு விரோதம் வரும். ஸ்ரீசங்கராசாரியர் முடிவில் ப்ரபஞ்சம் (மித்யை) இல்லை யாதலால் ப்ருஹ்மமும் ப்ரபஞ்சமும் ஒன்றுதான் என்றார். ப்ரபஞ்சம் இல்லையாவது ப்ருஹ்மத்தைக் காட்டிலும் வேறானதாக இல்லை (வ்யதிரேகேண அபாவ:) எனறர்த்தமாம். இதை பாமதி என்னும் வ்யாக்யானம் ‘அநந்யம் என்றதினால் ப்ருஹ்மத்துக்கும் ப்ரபஞ்சத்துக்கும் பேதமில்லை என்று நாம் சொல்லவில்லை; ஆனால் பேதமிருக்கிறது என்பதை மட்டும் நிராகரித்தோம்’ என்று விவரித்ததாம். சங்கரமதானுஸாரிகளான வ்யாக்யாதாக்கள் ப்ரபஞ்சத்தை அஸத் (இல்லாதது) அல்ல என்று வற்புறுத்துகிறார்கள் என்றும், நிருபாதிகமாகவும் (absotutely) எக்காலத்துக்கும் (for all times) உண்மையல்ல என்றார்களே ஒழிய, ப்ரும்மஸாக்ஷாத்காரம் வரும்வரையில் ப்ரபஞ்சம் ஸத்யம்தான்; நமது ப்ரவ்ருத்திக

னும் அது ஸத்யம் என்பதை ஒட்டியே இருக்கின்றன, என்றார்கள் என்றும், மித்யாத்வம் (பொய்மை) ஆவது ப்ருஹ்மப்ராப்தி வரையில உண்மையாயிருப்பதன்றோ, என்றும் இந்த ஸ்வாமி எடுத்துக்காட்டி இரண்டு மதங்களுக்கும் ஒருஸங்கதியை கற்பிக்கிறார்! இது எப்படிப் பொருந்தும் என்பதை தீபிகை நண்பர்களே தீர்மானிக்கட்டும். அஸத் என்றால் முயற்கொம்பைப் போல் இல்லாதது (துச்சம்) என்று அத்வைதிகள் சொல்லும் அர்த்தம். இல்லாத ப்ரபஞ்சத்தை இருப்பதாக நினைக்கும் அஜ்ஞானம் கழிவதுதான் மோக்ஷம்; அதற்கு உபாயம் ப்ருஹ்மம் தவிர மற்றதெல்லாம் பொய் என்னும் ஜ்ஞானமே என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இவர்களுக்கு ப்ரபஞ்சம் ஸத் (உள்ளது) என்பது ஒக்குமா? பகவத் க்ருபையை அபேக்ஷிக்கும் பக்திதான் உபாயமாகுமோ? ஒன்று மட்டும் நிச்சயம் 'ஸத்யம் என்றால் முடிவில் அஸத்யம்' என்று ஒப்புக்கொள்ளவாவது அப்படி ஒப்புக்கொண்டாவது ஸ்ரீபாஷ்யகாரர் மதத்தைப் பிறர் பஹுமானிக்க வேண்டும் என்று அபேக்ஷிக்கவாவது ப்ராமாணிகரான ஸ்ரீவைஷ்ணவர்கள் தயாராயிருக்கவில்லை.

'[illegible]' (ஸமஸ்த சேதநாசேதனங்களையும் விசேஷணமாய் - உறுப்பாய் - உடைய ப்ருஹ்மம் ஒன்றே தத்வம்.) என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்ததும், கர்மமாகிற உபாதி (தடை) யினால் சேதநாசேதனங்கள் அடங்கிய ப்ரபஞ்சம் உண்டாய் உபாதி ஒழிந்தபோது ஸத்யமான ப்ருஹ்மம் மிகுந்து நிற்கின்றது என்ற அத்வைதபக்ஷமும், இரண்டு மதங்களும் ஸந்திப்பதற்கு ஓர் இடமாம். அதெப்படியென்று இவர்காட்டவில்லை. அத்வைதிகளின் உபாதி யதார்த்தத்தில் இல்லாதது; அதுமாயை; அஜ்ஞானத்தினால் கற்பனை செய்யப்பட்டது. உபாதி உண்மையானால் பரிசுத்தமான ப்ருஹ்மம் அவர்களுக்கு இல்லை. உபாதி ஜீவனைப்பற்றுமானால் ப்ருஹ்மத்தைக் காட்டிலும் வேறாய் ஸத்யமாயிருக்கும் ஜீவனை ஒப்பவேண்டிவரும். அவர்களோ ப்ருஹ்மம் ஒன்றுதான் ஸத்யம் மற்றதெல்லாம் மித்யை என்கிறார்கள். நம்மதத்தில் ப்ருஹ்மத்துக்கு ப்ரகாரமாயிருக்கும் சேதநாசேதனங்கள் முழுவதும் எப்பொழுதும் எந்த அவஸ்தையிலும் உண்மையானவை. கீழ்க்கூறிய ஸ்ரீதேசிகன் வாக்யத்துக்கு அடுத்தாப்போலிருக்கும் 'ப்ருஹ்மத்துக்கும் ப்ரகாரங்களுக்கும், 'ப்ரகாரங்களாகிற சேதநாசேதனங்களுக்குள்ளும், பரஸ்பரம் அத்யந்த பேதங்கள் உண்மையில் உள' என்று அருளிச்செய்திருப்பதை இந்த ஸ்வாமி கவனித்திருப்பார். எனவே இவ்விரண்டு பக்ஷங்களும் ஒன்றாவதெப்படி? ஒன்றுதான் என்றால் இரண்டு மதஸ்தர்களிலும் எவராவது ஒப்புவாரா? ஆனால இத்தகைய ஸமாதானங்களை ஒப்புக்கொள்ளாதவர்கள் ஹடவாதிகள் என்று இந்த ஸ்வாமி தம் வ்யாஸத்தில் சொல்லிவிட்டார் அத்வைதிகளுக்கு நம்மதத்தைப்பற்றச் சண்டையில்லாம லிருப்பதற்காக ஒரு [illegible] சொல்லுகிறார். அதனால் ப்ரபஞ்சம் உண்மை என்னும் ராமாநுஜமதமும், மித்யை என்னும் சங்கரமதமும் ஸமரஸமாய் விடுமாம். அதாவது. 'சேதநா சேதனங்களடங்கிய ப்ரபஞ்சம் முழுவதும் உண்மையில் ப்ருஹ்மத்தின் ஸாரமாய் (in truth and essence of the nature of Brahman) கர்மமொழிந்தால் அவைகளை உள்ளபடி அநுகூலமாக அநுபவிக்கும் தன்மை அவைகளிடத்திலேயே ஸ்வதஸ்ஸித்தமாய் மறைந்து கிடக்கின்றன (potential)' - என்று பகவத்ராமாநுஜமதத்தைச் சொல்லவேண்டுமாம். ஒன்று கேட்போம். இதில் அநுபவிப்பானொருவன், அநுபவிக்கப்படும் பொருள், அநுபவித்தல், என்று பிரிவுகள் காணப்படுகின்றனவே. அவற்றை இந்தஸ்வாமி அத்வைதத்துக்குக் கற்பித்தாலும், அந்த மதஸ்தர்கள் ஒப்புக்கொள்வாரா? முடிவில் மித்யைதானே என்றால் நம்மோடு அவர்களுக்குச் சேர்க்கை எங்கே? 'கள்ளனும் உண்டு பயமுமில்லை' என்றமாதிரி மழுப்பாமல், ஈச்வரன், ஜீவன், அசேதனம், ஆகிய மூன்று தத்வங்களும் எப்போதும் எந்த ப்ரகாரத்தாலும் உண்மை என்பதே எங்கள் மதம் என்று பரிஷ்காரமாய்ச் சொல்வதே நலம் என்பது நமது துணிவு. இதை ஒப்பாதவர்களும் நம் ப்ராமாணிகதையில் ஸந்தேஹப்பட மாட்டார்கள்.



தத்வ நிரூபணத்தில் இப்படி ஒற்றுமையைக்காட்டிவிட்டுப் பிறகு ஹிதம் என்னும் மோக்ஷோபாயத்தில் ஸந்திப்புக்கு இடம் தேடுகிறார். ஸ்ரீபாஷ்யகாரர் '[illegible]' - யோகம் செய்து கொண்டிருப்பவன் - இத்தகையவன் என்பதும், அத்வைதிகள் 'ஜீவன் முக்தன்' இன்னபடியிருப்பான் என்பதும், இரண்டு தர்சனங்களும் சேரக்கூடிய இடமொன்றாம். இருவருக்கும் சரீர அபிமானமில்லையாதலால் கர்மங்களினால் அவர்க்காவதொன்றுமில்லையல்லவா என்கிறார். வெறும் சப்தத்தினால் மட்டும் ஏமாறாமல் இதன் அர்த்தத்தைக் கவனிக்க வேண்டும். இருவர்களும் இந்த தேஹத்துடன் இருக்கும் தசையைத்தானே இங்கு சொன்னது? சரீர அபிமானமில்லையென்றால் பசி தாகங்கள்கூட இல்லையோ? யோகதசையில் இருப்பவனுக்கும் கரணங்கள் விடாய்க்கும் ஆதலால் அவைகளை மறுபடியும் த்யானத்துக்குத் தகுந்தவைகளாக்க ஸாத்விகாஹார ஸேவை முதலியவைகளைச் செய்ய வேண்டும் என்றல்லவோ ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தது. யோகஸித்தி பெற்றவனும் லௌகிகர்களுக்குச் சரீராதிகளில் உள்ள பற்று அற்றவனாகிலும் சரீரம் விடுமளவும் கர்மங்களைவிட முடியாதவன் என்று தீர்மானித்தார். முக்தரைப்போல் ஆத்மகுணங்களை உடையவன் ஜீவன் முக்தன் என்றால் விரோதமில்லை. ஆனால் 'நானே ப்ருஹ்மம்' என்பதை அறிந்ததாகச் சொல்லிக்கொண்டு உலகத்தாரைப்போல் சரீரயாத்திரையை நடத்துகிறவன் ஜீவித்திருப்பவனேயன்றி முக்தனாகமாட்டான். ப்ரபஞ்சம் அவனைவிடவில்லை; அவனும் ப்ரபஞ்சத்தை விடவில்லை. அப்படிப்பட்டவன் கர்மங்களை விட்டு விடலாமென்றால் அது ஸ்ரீபாஷ்யகாரர் மதத்துக்கு ஒக்குமா?

அத்வைதிகள் ‘ அஹம் ப்ரஹ்மாஸ்மி ’ (நானே ப்ரும்மமா யிருக்கிறேன்) என்று உபாஸிப்பதும் நம் ஆசார்யர்கள் ‘ நான் பகவானுக்குச் சேஷபூதன்’ ‘பகவான் எனக்கு அந்தராத்மா’ என்று உபாஸிக்க உபதேசித்ததும் ஒரு ப்ரகாரமாக இருக்கிற தென்று இந்த ஸ்வாமி உரைக்கிறார். மேலும் ஸ்ரீசங்கரர் ப்ரும்மம் நிர்க்குணம் என்றதை' அவர் பின்னோர்கள் ப்ருஹ்மம் கல்யாணகுணங்க ளெல்லாவற்றையும் தன் ஸ்வரூபத்தில் அடக்கிக் கொண்டிருக்கிறது (part and parcel) என்றும் ஆனால் தங்கள் பரிபாஷையில் ஸ்வரூபத்துக்கும் குணத்துக்கும் வித்யாஸமில்லை யென்றும் விவரித்தார்களாம். இது ஸ்ரீபாஷ்யகாரர் ப்ருஹ்மம் கல்யாண குணங்களை உடையது என்றதற்குச் சமானமாம். ஸ்ரீசங்கரர் ஸகுண உபாஸகருக்கும் காலக்ரமத்தில் தானே ப்ருஹ்மமாய் விடுகிற உயர்ந்த மோக்ஷம் கிடைக்கும், என்றும் அங்கீகரித்தாராம். இவற்றை யெல்லாம் பார்க்கும்போது அத்வைத விசிஷ்டாத்வைத மதங்கள் இரண்டும் ஒன்றுகூடும் ப்ரகாரங்கள் தெறிகின்றன என்கிறார். இதனால் என்ன ஒற்றுமை ஏற்பட்டது? வேற்றுமை அன்றோ விளக்கப்பட்டது! சுண்ணாம்பு அதன் வெண்மை யென்றாப்போல் ஒருவஸ்துவும் அதன் குணமும் வெவ்வேறு பதார்த்தங்கள் என்பது லோகாநுபவத்துக்கும் சாஸ்த்ரத்துக்கும் ஒத்த அர்த்தம். காந்தியும் ஸூர்யனும்போல் சிலகுணங்கள் சில பதார்த்தங்களோடு பிறிக்க வொண்ணாதபடி எப்பொழுதும் சேர்ந்தே இருக்குமாயினும் அவை வெவ்வேறு என்னத் தட்டில்லை. ஆகவே ப்ருஹ்மம் நிர்க்குணம் என்று ஸாதிப்பதற்காக ஸ்வரூபமும் குணமும் ஒன்றுதான் என்று குதர்க்கம் சொன்னால், அது பகவான் கல்யாணகுண விசிஷ்டன் என்றதாகுமோ? ஸகுண உபாஸகருக்கும் நிர்க்குண ப்ருஹ்மம் ஆய்விடும் மோக்ஷம் உண்டென்றால் அதனாலேயே இரண்டு மதங்களில் சொல்லிய உபாஸனங்களும் ஒருமாதிரி ஆய்விடுகின்றனவோ?

முக்தி நிரூபணத்தைச் சீர்தூக்கு மிடத்திலும் இவர் ஒற்றுமை காண்பது ஆச்சர்யமா யிருக்கிறது. நமது மதத்தில் மோக்ஷமென்பது வெறும் கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தைக் காட்டிலும் மிகவும் உயர்ந்ததான ஸர்வவித கர்மபந்தங்களும் நீங்கி துலையற்ற ஸ்வாதந்த்ரியம் பெற்று (ஸ்வராட்) பகவத் சேஷமே ரஸமான தன் இயற்கையான ஸ்வரூபத்தைப்பெற்று, ஸமஸ்த கல்யாண குணாகரனான பகவானோடு ஏகரஸமாக அவன் கைங்கர்யபர்யந்தமான ஆனந்தாநுபவம் பண்ணுவது என்னப்பட்டது. ஜீவ ஈச்வரபேதமில்லாமல் நிர்க்குணமாயிருக்கும் ப்ருஹ்மமாக ஆய்விடுவது அத்வைதிகளின் மோக்ஷம். இதனால் தடங்கலற்ற ப்ருஹ்மாநுபவம் நிர்க்குண அநுபவமல்ல என்று தெரிகிறது. மேலும் நாம் மிகவும் உத்க்ருஷ்டமாய் நினைக்கும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை ஸ்ரீசங்கரர் தாழ்ந்தபடியில் இருப்பதாகக் கூறு என்றார். இதுதான் ஸாமரஸ்யமோ?



ப்ருஹ்ம ஜ்ஞானத்தினால் ஒருவன் முக்தனாகி விட்டால் பிறகு பொய்யான ப்ரபஞ்சம் மிகுந்திருக்கிறதா நசித்துவிட்டதா? இருக்குமாகில் முக்தராகாத பலஜீவர்கள் இன்னும் இருப்பதால் ஆத்மா ஒன்றே என்பதெப்படி? அத்வைதிகள் ஏக ஜீவவாதத்தை ஒப்பவில்லை யென்றும் நமது ஸ்வாமி சொல்லுகிறார். ஸ்ரீசங்கரரும் ஒரு ஜீவன் அவித்யைநீங்கி முக்திபடைவதினாலேயே ப்ரபஞ்சம் முடிகிறதில்லை யென்றாராம். ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரும், கடைசி வரையில் உள்ள எல்லா ஆத்மாக்களும் முக்தராகும்வரையில், அதற்குமுன், முக்தியடைந்தவர்கள் ஸகுண ப்ரும்மத்தின் கைங்கர்யமாகிற கீழ்ப்பட்ட மோக்ஷஸாம்ராஜ்ய மநுபவிப்பதாயும், எல்லாரும் சேர்ந்து முக்தியடையும்போது தாங்களே, தங்களொழிந்து நிர்க்குண ப்ரும்மமாவது என்றாராம். ஜீவர்களனைவரும்முக்தராகும் தசை யுண்டாகலாமென்று ஸ்ரீதேசிகன் தத்வமுக்தாகலாபத்தில் அநுவதித்தாரென்றும், அது தீக்ஷிதர் முதலிய அத்வைதிகள் சொல்வதைப் போலிருக்கிறதென்றும் நம் நண்பர் எண்ணுகிறார். அப்போது ஈச்வரன் ஈச்வரத்வ வ்யாபாரமற்றிருப்பானும் (ceases function as Iswara). நிர்க்குணமாய் விடுகிறான் என்றர்த்தம் போலும்! ஏகஜீவவாதம், அநேக ஜீவவாதம் என்றாற்போல் அத்வைதிகளுக்குண்டான சச்சரவுகளுக்கு தீக்ஷிதரவர்கள் வெகு அழகிய ஸமாதானம் சொல்லியிருப்பதாய், நமது ஸ்வாமி யாதவாப்யுதயத்துக்குத் தாமெழுதிய முகவுரையில் வரைந்திருக்கிறார். அதாவது ‘எல்லா (அத்வைத) ஆசார்யர்களும் ஆத்மா ஒன்றே என்றும், ப்ரபஞ்சம் மித்யை என்றும் ஒருமனதாய் அங்கீகரித்தவர்கள். பொய்யான ப்ரபஞ்சத்தைக் குறித்துத் தங்கள் தங்கள் புத்திஸாமர்த்யத்துக் கேற்ப வெவ்வேறு நிரூபணங்களைச் செய்துவிட்டார்கள். வெறும் கட்டுக் கதைக்குப் பலவித ஸமாதானங்களைச் சொல்வதால் கெட்டுப்போன தென்ன?’—என்று. இந்த முடிவைக் கேட்கவா நமது நண்பர் இப்பாடு பட்டது? கட்டுக்கதைக்கும் உண்மைக் கதைகளான ஸ்ரீதேசிகாதிகளுடைய நிரூபணங்களுக்கும் ஸந்திக்கு மிடம் இவர்க்கு நன்றாய்க் கிடைத்தது! நாமொருகதை கேட்டிருக்கிறோம். ஒரு ஆசார்ய புருஷர் காலக்ஷேப கோஷ்டியில் மாயாவாதி யொருவர் வந்து ‘ கோயம் க்ரந்த: ’ (இது என்னக்ரந்தம்) என்று செய்த மஹத்தான பூர்வபக்ஷத்தை, அவ்வாசார்ய புருஷர் பகவத்விஷய மென்று கண்டித்தருளினாராம்! தீக்ஷிதரவர்கள் ஸமாதானமும் இதற்குக் குறைந்ததா!

சாஸ்த்ர விசாரங்களைத் தீபிகையைப் போன்றபத்திரிகைகளில் விஸ்தரிக்க ஸாத்யப்படாது. விஷயமொன்றைப் பரிசீலிக்கவேண்டிய ஆவச்யகதையை மட்டும் காட்டக்கூடும். ப்ரஸ்தாப விஷயத்திலும் அவ்வளவே நாம் செய்யத் துணிந்தது. கீழ் ஆரம்பத்திற் குறிப்பிட்ட இந்த ஸ்வாமியின் வ்யாஸத்தில் காணப்படும் பல அநுபபத்திகளில் ஸ்தூலமாகச் சிலவற்றைமட்டும் உதாஹரித்தோம். சாஸ்த்ரஜ்ஞர் கோஷ்டியில் அவர்களை ஆக்ரஹிகளென்னாமல் நமது நண்பர் தாம் சொல்லும் ஸாமரஸ்யங்களை நிலைநிறுத்த வேண்டுமென்பது

ஸ்ரீ:

# காமமும் மோக்ஷமே மோக்ஷமும் காமமே.

ஸ்ரீயப்பதியாய் ஸர்வஸ்வாமியாய் அபாரகருணா நிதியான ஸர்வேச்வரன் தன் அநுக்ரஹ விசேஷத்தால் லீலோத்யானமாக்கிய லீலாவிபூதியில் சேதநர்கள் தம் கர்மாநுகுணமாகப் பல வேறு பலங்களை அநுபவிக்கப் பல வேறு அதிகாரிகளாய் இருக்கிறார்கள். இவர்களால் அநுபவிக்கப்படும் புருஷார்த்தங்கள் தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்று நான்கென்பர் சிலர். இன்னும் சிலர் தர்மார்த்த காமங்களை ஐச்வர்யம் என்று ஒன்றாக்கி கைவல்யத்தை ஒன்றாக்கி மோக்ஷத்தை ஒன்றாக்கி 'ஐச்வர்யம் அக்ஷரகதிம் பரமம் பதம் வா' என்று மூன்றாக்குவர்கள். கீதாசார்யன் ஐச்வர்யத்தை 'ஆர்த்தோ அர்த்தார்த்தீ' 'ஜிஜ்ஞாஸு' என்று இரண்டாக்கி கைவல்யமும் மோக்ஷமும் கூட நான்காக்கியுள்ளார். இந்த லீலாவிபூதியில் அநவரத ஸாக்ஷாத்காரம்பண்ணிய மஹான்கள் தர்மார்த்த காம மோக்ஷங்களில் மோக்ஷமே நிலைநிற்பது; மற்றவை மூன்றும் அநித்யங்கள் என்பார். அவர்களுள்ளும் சில மஹான்கள் மோக்ஷத்தின் பேரையே அழித்துத் தர்மார்த்த காமங்களைப் புருஷார்த்தங்களாக்கித் தர்மமும் பொருளும் அழிவது; காமமே அழியாதது என்றுங் கூறியுள்ளார். இன்னும் சிலர் நான்கையும் புருஷார்த்தமாக்கி நான்கினும் காமமே நிலைநின்றது; இக்காமத்துக்கே மற்றைய மூன்றும் சேஷபூதங்களென்று என்பார்.

> சேம நல்வீடும் பொருளும் தருமமும் சீரியநற்
> காமமு மென்றிவை நான்கென்பர் நான்கினும் கண்ணனுக்கே
> ஆமதுகாமமறம் பொருள் வீடிதற் கென்றுரைத்தான்
> வாமனன் சீலனிராமாநுச னிந்தமண் மிசையே.

என்று திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்தார்.

மோக்ஷமும் பொருளும் தர்மமும் காமமும் என்று சொல்லவேண்டிய இடத்தில், வீட்டிற்கும் காமத்துக்கும் இரண்டு அடைமொழிகொடுத்துள்ளார்—நல் என்னும் அடைமொழி இரண்டுக்கும் பொதுவாயுள்ளது. வீட்டின் அடைமொழியாகிய சேமம் என்பதையும் காமத்தின் அடைமொழியாகிய சீரிய என்பதையும் ஆராய்ந்தால் க்ஷேமம் என்கிறசொல்லின் திரிபாகியசேமம் என்னும் பதமானது க்ஷேமம் என்றும் பதத்தின் பொருளாகவே வேண்டும். க்ஷே-



மம் என்றால் முன்னமே இருக்கும் வஸ்து கெடாமல் இருப்பதாகும். ஆகையால் இந்த ஜீவனுக்கு மோக்ஷம் ஸ்வரூபோசிதமென்று விளங்குகிறது. சீரிய என்னும் பதமும் நல் என்னும்பதமும் இவ்வுலகத்தில் அநித்யமாயிருக்கிற சிற்றின்பத்தை விலக்குகிறது. கண்ணனுக்கே யாமது காமம் என்னும் பேரின்பத்தைக்குறிக்கிறது. சிற்றின்பமாகிய காமமானது ஓடி ஓடிப் பலபல பிறப்பும் பிறந்து அநுபவித்த அநுபவம். பேரின்பமாகிய காமமானது இதுவரைக்கும் அநுபவிக்காமல் அபூர்வமாகிய பகவத்விஷய காமம். இதைத்தான் சீரிய நற்காமம் என்று அமுதனார் தம் அமுதவாக்கால் அருளியதாகும், அறம்பொருள் வீடுகள் இக்காமத்துக்குச் சேஷபூதமாய் அநுகூலித்து நிற்கும்.

ஒருவன் காமச்சுவை அநுபவிக்கவேண்டுமேயானால் அதற்கோரிருப்பிடமும் அதற்குவேண்டிய உபகரணங்களும் அதைக்கூட்டுவிக்கும் நல்வினையும் வேண்டும். அழியும் இடத்தில் இருந்து அழியும் உபகரணங்களைக் கொண்டு அழியும் நல்வினைகொண்டு சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடைய தலைவன் தலைவிகளால் அநுபவிக்கும் காமச்சுவை நினைக்கும்தோறும் துன்பத்துக் கிடமாகும் - ஆகலால் இதனை அபுருஷார்த்தமாக்கி அழியாத நித்யவிபூதியாகிய வீட்டில் அழியாத நித்யவஸ்துக்களைக் கொண்டு ப்ரயோஜநத்தைக் கருதாமல் பகவத்ப்ரீதிக்கான ஸத்கர்மங்களை முதலாகக்கொண்டு அநுபவிக்கும் பேரின்பமாகியது காமம். 'நித்யோ நித்யாநாம் சேதநச்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந்' என்கிறபடியே நித்யர்களாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபர்களாய் ஜ்ஞாநாநந்த குணகர்களாய் அநேகர்களாகிய ஜீவர்களுக்கு நித்யனாய் ஸத்ய ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாய் ஜ்ஞாநாநந்தகுணகனாய் ஒருவனாக இருக்கிற பரமாத்மா ஸமஸ்தகாமங்களையும் அநுபவிப்பிக்கிறான், என்று இதன்பொருள். இவ்வநுபவம்தான் 'ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ' என்கிற அநுபவமாகும். இவ்வநுபவமுடையவன்தான் 'ந பிபேதி குதச்சந' (ஒன்றாலும் பயப்படுவதில்லை) என்கிறதற்கு விஷயமானவன். இப்பேரின்பமான காமத்தையே வள்ளுவர் தம் அழகிய குறளில் காமத்துப்பாலின்கண் மொழிந்துள்ளாரென்பதை இக்குறளின் உள்ளுறைப்பொருளை ஊன்றி உணர்வோர்க்குத் தெள்ளிதின்விளங்கும். இதனை 'ஆழ்வார் பெருமை' என்பதில் வேதாந்ததீபிகையிலும் தோற்றுவாய் செய்திருக்கிறேன்.

பிணி மூப்பிறப்புக்களின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மையராய் உருவும் இருவும் பருவமும் குலனும் குணமும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமை யுடையராய தலைமகளும் தலைமகனும்' என்று பரிமேலழகர் காமத்துப்பால் முகவுரையில் கூறியது ஜீவபரமாத்மாக்களுக்கே தகுமென்று தோற்றுகிறது.

எவ்வாறெனின் பிணிமூப்பிறப்புக்களில்லாத நித்யரான பராவராத்மாக்கள் மிகுதிகுறைவுகளற்று என்றுமொன்றும் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபராய் உபயவிபூதியையும் ஸம்பத்தாகப் பெற்று அநுபவிக்கும் விஷயத்தில் ஏற்றத்தாழ்வின்றி 'ஸாயுஜ்யம் த்3வயோராத்மநோ போ4க்3யஸ்ய ஸ்வாவிஶிஷ்டதா । ஸாஷ்டிதா ஸமபோ4க3ஸ்ய, தாரதம்ய விஹீநதா ॥' என்கிறபடியே ஸாயுஜ்ய ஸாஷ்டிதைகளை (ஒருமித்து அநுபவிப்பதையும் ஒரேமாதிரியாயநுபவிப்பதையும்) நிரம்பப் பெற்று நித்யம் பஞ்சவிம்சதி வார்ஷிகர் (அதாவது எப்போதும் இருபத்தைந்துவயஸ் ஸுள்ளவர்) என்கிற பருவமுற்று வைஷ்ணவ குலம் என்கிற குலத்தாலும் ஞாநம் ஆநந்தம் என்கிற குணங்களாலும் ஒத்து, அன்பு என்கிற ஒன்றே பரமாத்மாவிடத்தில் க்ருபையென்று பேராய், ஜீவனிடத்தில் பக்தி என்கிற பேராய் இருப்பதனால் இதனாலும் ஒத்து 'ராமாநுஜம் லக்ஷ்மண பூர்வஜம் ச' என்கிறபடி ஜீவன் பரமாத்மாவாலும் பரமாத்மா ஜீவனாலும் நிரூபிக்கப் படுகிறபடியை நாராயண சப்தத்தாலும் குருவினால் உபதேசிக்கப் பெற்ற சப்தத்தாலும் ரஹஸ்யார்த்தங்களாலும் தெரிந்து உணரப்படுகிற ஜீவனே நாயகி. இந்நாயகிக்குத் தகுந்த நாயகன் பகவானே. 'துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபி4ஜநலக்ஷணாம் । ராக4வோऽர்ஹதி வைதே3ஹீம் தம் சேயமஸிதேக்ஷணா ॥' என்று வால்மீகிபகவான் அருளியதும் இங்கு நோக்கத்தக்கது. தமிழர் புணர்ச்சியை (ஸம்ச்லேஷத்தைக்) களவென்றும் பிரிவை (விச்லேஷத்தைக்) கற்பென்றும் கூறுவர். களவாவது காந்தர்வம். கற்பாவது எவ்வகையான இடையூறு வனும் காந்தர்வத்தால் புணர்ந்த தலைமகனையே தன் மணமகனாகக் கொள்வது. ஈச்வர ஸௌஹார்த்தம் அடியாய் யாத்ருச்சிக ஸுக்ருதாதி வ்யாஜங்களாலேற்பட்ட அநுபவத்தைத் தான் களவாகக் கூறுவது-

உணலினு முண்டதற லினிது காமம்
புணர்தலினூட லினிது.
ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடிமுயங்கப் பெறின்.
உப்பமைந்தற்றால் புலவியது சிறிது
மிக்கற்றால் நீளவிடல்.

என்கிறபடியே இந்தபோகம் ஸாத்மிக்க (ஜீர்ணமாக)ப் பொருள்வயிற் பிரிதல் கல்விவயிற் பிரிதல் வேட்டைவயிற்பிரிதல் என்கிற வ்யாஜத்தாலே பிரிந்து இருவர்க்கும் பிரிவும் பரிவும் ஒத்து ஒருவர்க் கொருவர் எப்பொழுதுகாண்போம் என்று அவாமிகுத்து கூடினாலல்லது தரிக்க முடியாதென்னுமளவு முண்டாகிக் கூடும்வரையில் உள்ளபிரிவுக்குக் கற்புஎன்றுபெயர். இதனை வெறிவிலக்கு



மணவிலக்கு முதலிய துறைகளான தீர்ப்பாரை, கருமாணிக்கமலை, முதலான திருவாய் மொழிகளில் அநுபவித்தறியலாம்.

நம்மாழ்வார் முதலானவர்களுடைய அநுபவங்களும் களவும் கற்புமாகவேயுள்ளன. 'அஞ்சிறைய' ஈட்டின் அவதாரிகையில் முற்காலத்திலே அல்பம்விலக்ஷிதனாயிருப்பான் ஒருவன் 'வீதராகராயிருப்பார் பரிக்ரஹித்துப் போருவதொன்றாயிருந்தது. தத்வபரமாக அடுக்கும் என்று இத்திருவாய்மொழியளவும்வர அதிகரித்து இத்திருவாய்மொழியளவும் வந்தவாறே இதுகாமுக வாக்யமாயிருந்தது என்று கைவிட்டுப்போனானும் 'நிஷ்ப்ராண வஸிதவ்ய:' என்று விதிக்கிற பகவத்காமமென்றறிந்திலன். பாக்யஹாநியாலே இங்குநோக்கத் தக்கது.

காமிநீயானவள் நாரை முதலியவற்றைத் தூதுவிடுதல் ஆசார்யமுகத்தாலே பகவானிடத்தில் விண்ணப்பித்துக்கொள்ளுதலாகும். ஆனால் ஒருபக்ஷியே அமையாதோ பலவற்றைத் தூதுவிடவேண்டுமோ எனின் பலவேறு நற்குணங்களையுடைய ஆசார்யர்களைப் பலவேறு நற்குணங்களையுமுடைய பல பக்ஷிகளாகவும் ஆக்கித் தூதுவிடுகிறார் என்கிறதை ஶ்ருதிவேதாந்த நிஷ்க தாத்பர்ய ரத்நாவளியில் 'ஸத்யஸத்த்வாந் ஸ்வாவ்ய ஸுஸம்ஹித ஸ்வாமிநாந் க்ருஷ்ண ஸாரங்க ஸௌந்தர்ய ஸாதராரோஷாலஸாந் ஹம்ஸந்யஸ்த மஹாவக்ஷஸோ பாஹ்ய மத்வாந் । ஷட்த்வஸ்ய ஸஹவ்ருத்தீந் ஹிமத ஶிஶிராந்யாஸ ஸம்ரோதி யோஷ்யா நாயகாந் க்ருஷ்ணயா வர்ணித ஸம்ஜ்ஞ வ்ருபஸீ தூத நீத்யா ॥' என்று ஆசார்யர் அருளிச்செய்தார். இதன்பொருளை ஈண்டு விரிப்பிற் பெருகும்.

மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்பாசுரங்களைப் பார்த்தால் முதல்திருவாய் மொழியில் பரமதநிரஸநபூர்வகமாக தத்வநிஷ்கர்ஷம் பண்ணி இரண்டாம் திருவாய்மொழியில் உபாயத்தை உபதேசித்து மூன்றாம் திருவாய்மொழியில் ஸர்வேச்வரனை மிகவும் நிக்ருஷ்டனானதான் ஆச்ரயிப்பதற்கு அவனுடைய ஸௌலப்யத்தை அருளிச்செய்து பகவானை ப்ரத்யக்ஷீகரித்து அநுபவிக்குங் காலத்தில்,

துயக்கறு மதியில் நன்ஞாநத்துளமரரைத் துயக்கும்
மயக்குடை மாயைகள்வானிலும் பெரியன வல்லன்
புயற்கருநிறத்தனன் பெருநிலம் கடந்த நல்லடிப்போது
அயர்ப்பிலனலற்றுவன் தழுவுவன் வணங்குவனமர்ந்தே.

என்று மாதாவானவள் குழந்தை தானறியாதபோதிலும் தன் தாரணார்த்தமாய்க் கட்டிக்கொண்டு கிடந்து அதற்கும் ரக்ஷையாவதுபோல் வஹி

ஷ்டசண்டாள விபாகமற ஸர்வஸுலபமாய் எல்லார் தலையிலேயும்வைத்த திருவடிகளைக் கரணத்ரயத்தாலும் அநுபவிப்பே னென்றும்,

அமரர்கள் தொழுதெழ அலைகடல் கடைந்தவன் றன்னை
அமர்பொழில் வளங் குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள்
அமர்சுவையா யிரத்தவற்றினு ளிவைபத்தும் வல்லார்
அமரரோடுயர்விற் சென்று மவர்தம் பிறவி யஞ்சிறையே.

என்று இந்தஸௌலப்ய ப்ரதிபாதகமான பாசுரங்களை அத்யயநம்பண்ணினவர்கள் நித்யஸூரிகளோடு கூட அந்த அழியாதவீட்டில் பகவானை அநுபவிக்கச் சென்று அதற்கு விரோதியான பிறவியாகிய பத்ததசையினின்றும் ஒழிவார்கள் என்றும் அநிஷ்ட நிவ்ருத்தி இஷ்டப்ராப்திரூப பரமபுருஷார்த்தத்தையும் அருளிச்செய்து நிகமித்தார். பிறகு 'அஞ்சிறைய' தொடங்கி 10-ம் பத்து. 3. ம் திருவாய்மொழிமுடிய காமச்சுவையின் கவடுகளா யிருக்கின்றன. பின்னர் 'சார்வேதவநெறி' தொடங்கி க்ரந்த பரிஸமாப்திவரை தானான தன்மையாய்ச்சென்று நிகமத்தில் அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன் என்று அருளினார். ஆகலால் ஆரம்பத்தில் பரமதத்வ பரமஹித பரமபுருஷார்த்தங்களைக் கூறி நிகமத்திலும் வீடுபெற்ற என்று பரமபுருஷார்த்தம்கைவந்ததாய் அருளியதைப்பார்த்தால் இடையிலுள்ள காமமும் மோக்ஷம் மோக்ஷமும் காமம் என்பதாய்த் தெற்றென விளங்குகிறது

திருமங்கைமன்னன் நாய்ச்சியார்கோவில் என்கிற திருநரையூரில் திருநறையூர் நம்பியிடத்தில் அஷ்டாக்ஷரோபதேசம் பெற்று அப்பெருமை மூலமாக ஆலிநாடன் அரட்டமுக்கி அடையார்சீயம் கொங்குமலர்க் குழலியர் வேள் மங்கைவேந்தன் கொற்றவேற்பரகாலன் கலியன் என்று விருது கூறிக்கொண்டு அருளிச்செய்யும் ப்ரபந்தங்களாகிய பெரியதிருமொழி திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம் திருவெழுகூற்றிருக்கை சிறிய திருமடல் பெரிய திருமடல் என்னும் ப்ரபந்தங்களுள் சிறியதிருமடல் பெரியதிருமடலில் பாரோர் சொல்லப்பட்ட மூன்றன்றே இப் அம் மூன்றும், ஆராயில் தானே அறம் பொருளின்பமென்று, ஆராரிவற்றினிடையதனை யெய்துவார், சீராரிருகலையு மெய்துவர் சிக்கெனமற்று, ஆரானுமுண்டென் பாரென்பது தானதுவும் ஓராமையன்றே உலகத்தார் சொல்லும் சொல், ஓராமையாமாறது வுரைக்கேன் கேளாமே, காரார்புரவியேழ் பூண்டதனியாழி, தேரார்நிறைகதிரோன் மண்டலத்தைக்கீண்டுபுக்கு ஆராவமுதமங்கெய்தி அதினின்றும், வாராதொழிவதொன்றுண்டே அதுநிற்க, ஏரார்முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே, என்றருளிச் செய்தார். இதனர்த்தம்:—



'இவ்வுலகில் பண்டித பாமரர்யாவரும் அங்கீகரித்த புருஷார்த்தம் மூன்று தான். ஆராய்ந்தால் அவைகள் அறம் பொருள் இன்பம். இம்மூன்றிலும் காமபுருஷார்த்தத்தை அடைபவர் மற்ற தர்மார்த்தங்களையும் அடைந்தவரேயாவர். இம்மூன்றையும் அல்பம் அஸ்திரம் துக்கமூலம் துக்கமிச்ரம் துக்கோதர்க்கம் விபரீதாபிமானமூலம் ஸ்வாபாவிகாநந்த விருத்தம் என்னும்தோஷஸப்தகத்தையுடையது என்று தூஷித்து, நித்யமாய்ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாய் ஒரு புருஷார்த்தம் உண்டென்று சாஸ்திரங்கொண்டு சொல்லுவார் சொல்லுக. ஆராய்ந்து பாராமல் சொல்லுவார் சொல்லை விளக்குவேன் காண்மின் எவ்வளவோ தூரத்துக்கப்பால் இருந்து கிரணங்களால் வருத்தும் ஸூர்யனுக்கு ஸமீபத்தில் போவதாம்! அந்தமண்டலத்தைப் பிளந்துகொண்டு போவதாம்! அவனுடைய தேருக்கு ஒற்றைச்சக்கரமாம்! குதிரைகளோ ஒன்றிரண்டல்ல ஏழாம்! அக்குதிரைகள் கால்வைக்க இடமில்லாத மேகமண்டலத்துக்குமேல் ஸஞ்சரிப்பதாம்! சோலையும் ஸுகமுமாய் இல்லாமல் வெய்யிலும் வெப்பமுமான வழியில்போய் ஸூர்யமண்டலத்தைப் பிளந்துகொண்டு திருப்தி பிறவாத அமிருதமானபரமபுருஷனை அடைவதாம்! அடைந்தால்திரும்பிவரக்கூடாதாம்! இது எவ்வளவு அஸங்கதம்! இப்படியில்லாமல் முகம் பழகின இடமாய் செல்லுதற்கு சோலையும் நிழலுமாய் அநுபவிக்கும் ஸ்தலம் திருநறையூர் முதலான திவ்யதேசங்களாய், அநுபவிக்கும் நாயகனும் ஸ்ரீவைகுண்ட நாயகனாகிய துர்லபன்போல் இல்லாமல் ஸுலபனான அர்ச்சாரூபியாயிருக்க இவனைவிட்டு எத்தைப்பற்றுவது? திருவடியும் 'தேவமோசே வாரோராஜநு வயிதிகூ ப்ரதிஷ்டிக: ! ஸகிலூ தியதா வீரவாவொ நாஞ்ஞ மதஆதி' என்றனிறே! சாஸ்திரார்த்தத்தில் நம்பிக்கையில்லை யென்பதில்லை. ப்ரத்யக்ஷீகரிக்கலாயிருந்ததில்லை. அதுபற்றி 'ஸநுஞ' என்று ஓதுகியதாயும் மோக்ஷமாகிய அது உண்டாக! இல்லையாக! அதுபற்றி பிணக்கு வேண்டாம். ஸ்தலஸஞ்சாரியாய் ஸுஸம்ஸ்க்ருதமுமாய் உபயோக யோக்யமுமாய் சமயலரைக்குள்ளேவந்து கைப்பட்டதாயிருக்கிற முசலைவிட்டு ஆகாசஸஞ்சாரியாய் சாஸ்திரநிஷித்தமாய் உபயோகஅநர்ஹமாயிருக்கிற காகத்துக்கு ல்லெடுத்துத் திரிவது எவ்வளவு அறிவுயில்லாத சேதநக்ருத்யம்என்று றுத்து பகவத்விஷய காமமேபுருஷார்த்தம்' என்று

(இன்னும்வரும்.)

ஸ்ரீநிவாஸாசார்யர்.
தமிழ்ப்பண்டிதர்-மன்னார்குடி.



186729

ஸ்ரீ:

# ஸதாசார நிஷ்கர்ஷம்.

(முன்தொடர்ச்சி.)

4. ஸதாசாரத்தை விட்டால் உண்டாகும் கேடேல். 'ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே । ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ: ॥' (பாவனொருவன் என்னுடைய ஆஜ்ஞா ரூபங்களான ச்ருதி ஸ்ம்ருதிகளைக் கடந்து நிற்பனோ? அவன் என்னுடைய ஆஜ்ஞையை மீறிநடந்தவனுகையால் என்னிடத்தில் பக்திசெய்து கொண்டிருந்த போதிலும், எனக்கு, துரோஹம் செய்தவனே, அவன் எனக்கு இஷ்டமில்லாததை செய்தானுகையால் வைஷ்ணவனல்ல) வென்றும், 'அவிப்லவாய தர்மாணாம் பாலநாய குலஸ்ய ச । ஸம்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதாஸ்தாபநாய ச । ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவதேவஸ்ய சார்ங்கிண: ॥ மநீஷீ வைதிகாசாரம் மநஸாபி ந லங்கயேத் ॥' ப்ரபந்நன் தர்மங்கள் நாசமடையாம லிருப்பதற்கும், சிஷ்யர்கள், புத்ரர்கள் இவர்களை ரக்ஷிப்பதற்கும், ஜநங்களைச் சேர்த்துக் கொள்வதற்கும், அதாவது தன்னனுஷ்டானத்தைப் பார்த்து அயலார்கள் ஆசரிப்பதற்கும், வேதத்தில் சொல்லப்பட்ட வர்ணாச்ரம தர்மங்களாகிற வரம்புகளை ஸ்தாபிப்பதற்கும், என்னுடைய ப்ரீதிக்கும் வேதத்தில் சொல்லப்படும் கர்மங்களின் அநுஷ்டானங்களை விடலாகாது,) என்றும், ப்ரபந்நர்களுள்பட வர்ணாச்ரம தர்மங்களை ஸதவதாகமாய் அநுஷ்டிக்க வேண்டுமென்றும், அப்படி யில்லாமல் போனால் பகவதப்ரீதிக்கு விஷயனாகவேண்டும் என்றும் சொல்லிற்று, 'ஸாதிதேந்யாயம் பதிதே தந்த்ராணாம்' என்று அவைபோன்ற கர்மாநுஷ்டானத்தைத் தவிர்ந்தால், 'யதா ஹி வல்லபோ ராஜ்ஞோ நதீம் ராஜ்ஞா ப்ரவர்த்திதாம் । லோகோபயோகிநீம் ரம்யாம் பஹுஸஸ்ய விவர்த்திநீம் ॥ லங்கயந் சூலமாரோஹேத் அநபேக்ஷோऽபி தாம் ப்ரதி ॥ ஏவம் விலங்கயந் மர்த்யோ மர்யாதாம் வேதநிர்மிதாம் । ப்ரியோऽபி ந ப்ரியோऽஸௌ மே மதாஜ்ஞா வ்யதிவர்த்தநாத் ॥' என்றபடியே ராஜாவினுடைய ப்ரீதிக்கு விஷயனுயிருக்கிற



வொருவன், அரசனால் உண்டாக்கப்பட்டு லோகங்களுக்கு மிகவும் உபயோகமுள்ளதாய், அநேகம் பயிர்களை விருத்தி செய்யக்கூடியதுமான நதியை அபேக்ஷையில்லா திருக்கச்சேய்தேயும், அதிகரமித்தானுகில் சூலத்தையேறும்படியான சிக்ஷைக்கு உட்படவேணுமோ, அதுபோல், வேதத்தில் ஏற்பட்ட அநாதியான வர்ணாச்ரம தர்மங்களை அநுஷ்டானம் செய்வதாகிய எல்லையை மீறுபவன், எனக்கு இஷ்டனுயிருப்பினும், என்னுடைய கட்டளையை மீறி நடப்பதாலே, ஏற்கனவே அவனிடத்தில் இருந்த ப்ரீதியும் நசித்துவிடும், என்று லக்ஷ்மீதந்த்ரத்தில் பிராட்டியைகுறித்து பகவான் மொழிந்த இந்த ச்லோகங்களைப் பார்த்தால், யாவராகிலும் தங்கள் தங்களுக்குரிய தர்மங்களைக் கனவிலும் விடலாகாது என்பது நிலைநிறுத்தப் படுகிறது. அதுமாத்திரமேயன்று, 'ஆசாரஹீநம் ந புநந்தி வேதா: யத்யப்யதீதா: ஸஹ ஷட்பிரங்கை: । சந்தாம்ஸ்யேநம் ம்ருத்யுகாலே த்யஜந்தி நீடம் சகுந்தா இவ ஜாதபக்ஷா: ॥' (ஆறு அங்கங்களுடன் ஒருவன் வேதத்தை அத்யயநம் செய்திருந்தாலும், ஆசாரங்குறைந்தவனுயின் அந்த வேதங்களே, மரண காலத்தில், இரகு முளைத்த பக்ஷிகள் கூட்டைவிடுவதுபோல், அவனை விட்டு விலகி விடுகின்றன, (பயன்படாமல் போகின்றன) என்று அநர்த்தங்களும் உண்டாமென்று, ஆசார ஹீநனை புருஷனுக்கு வேதசாஸ்த்ரம் முதலியவை கார்யகரமாகிறதில்லை யென்று வஸிஷ்டரும், 'கபாலஸ்தம் யதா தோயம் ச்வத்ருதௌ ச யதா பய: । துஷ்டம் ஸ்யாத் ஸ்தாநதோஷேண வ்ருத்தஹீநே ததா ச்ருதம் ॥' (மண்டையோட்டிலுள்ள ஜலமும் நாய்த்தோல் துருத்தியில் உள்ள பாலும் எப்படி இடத்தின் தோஷத்தினுல் அசுத்தமோ, அப்படிப்போல் ஸதாசாரம் இல்லாதவரிடத்தில் உள்ள சாஸ்த்ரஜ்ஞாநமும், இடத்தின் தோஷத்தினுல் தோஷமுள்ளதாக ஆகிவிடும், அதாவது அயலாருக்கு உபாதேயமாகாது) என்று வ்யாஸரும், 'யஸ்ய ச்ருதம் ந விராகாய ந தர்மாய ந சாந்தயே । ஸுபத்தமபி சப்தேந காகவாசித ஏவ ஸ: ॥' (எவனுடைய சாஸ்த்ராப்யாஸம் வைராக்யத்தின் பொருட்டும், தர்மாநுஷ்டானத்தின் பொருட்டும், உள்வெளி இந்த்ரிய நிக்ரஹங்களாகிய சாந்தியின் பொருட்டும் காரணமாக வில்லையோ அது, சப்தத்தினுல், நன்குயமைந்திருந்ததே யாகிலும், காக்கையில் சப்தம்போல் நிஷ்ப்ரயோஜநம் (என்று, இதிஹாஸ ஸமுச்சயமும், 'நாச்சாதயதி கௌபீநம் ந தம்சமசகாபஹம் । சுந: புச்சமிவ வ்யர்த்தம் பாண்டித்யம் தர்மவர்ஜிதம் ॥' (நாயினுடைய வாலானது, மறைக்கவேண்டிய ஸ்தானத்தை மறைத்துக்கொள்ளாமலும், ஈ கொசுஇவைகளை-

லனவர்கள் நிஷ்காம கர்மத்தாலே ஸித்தியடைந்தார்கள். ஜநங்களின் ப்ரயோஜனத்தை உத்தேசித்தாயினும் கருமஞ்செய்வதற்கு யோக்யனுயிருக்கின்றாய்; பெரியவன் எங்ஙெங்கக் கருமத்தைச் செய்கின்றானே அந்தக்கருமத்தை அந்யமனிதர்களும் செய்கின்றார்கள். அந்தப் பெரியவன் எதை ப்ரமாணமாகக் கொள்கின்றானே அதையே உலகம் அநுஸரிக்கும்) என்று, கீதாசார்யனருளிச்செய்தான். ‘வ்ருத்தம் யத்நேந ஸம்ரக்ஷேத் வித்தமேதி ச யாதி ச ॥ அக்ஷீணோ வித்ததஃ க்ஷீணோ வ்ருத்ததஸ்து ஹதோ ஹதஃ ॥’, ஸதாசாரங் குறைந்தவனுயின் ஹதனென்றும், புராணங்களிலும், ‘ஸதாசாரேண தேவத்வம் ருஷித்வம் ச ததைவ ச । ப்ராப்நுவந்தி குயோநித்வம் மநுஷ்யாஸ் ஸ்வவிபர்யயே ॥’ ஸதாசாரத்தினல்! தேவனுயிருக்கையும் மஹர்ஷியாயிருக்கையும், அடையலாம், அதிலலாமல் போனுல் கெட்ட யோனிகளில் ஜந்மமுண்டென்று ஸம்வர்த்தஸ்ம்ருதியிலும் சொல்லப்பட்டது. ப்ருஹஸ்பதியும், ‘ஶௌர்ய வீர்யாதிரஹிதஃ தபோஜ்ஞாந விவர்ஜிதஃ । ஶூத்ராஶ்ச நிஷ்த்ரியாஶ்சைவ ஸர்வே மூத்ரஸமாஸ் ஸ்ம்ருதாஃ ॥’ (சௌர்யாதிகளில்களில்லாத க்ஷத்ரிய புத்ரனும் தபஸ்ஸு ஜ்ஞாநம் முதலானவை யில்லாத ப்ராஹ்மண புத்ரனும், தனமில்லாத வைச்யபுத்ரனும், ப்ராஹ்மணன் முதலான மூன்று வர்ணத்தாருடைய சுச்ரூஷையில்லாத சூத்ரபுத்ரனும், இவர்களெல்லாரும் பிதாவின் மலமூத்ராதிகள்போலவே) யென்று, சொன்னர் ‘வேதோதிதம் ஸ்வகம் கர்ம நித்யம் குர்யாததந்த்ரிதஃ । தத்தி குர்வந் யதாஶக்தி ப்ராப்நோதி பரமாம் கதிம் ॥’ (வேதத்தில் சொல்லப்பட்ட தன்னுடைய காமத்தை ஸாவதாநமாய் அநுஷ்டித்து வந்தால் நல்லகதி யடையலா)மென்று மனுவும், ‘வர்ணாஶ்ரமாசாரயுதஃ வேதஹீநோபி வைதிகஃ । ஸ்வர்க்கதி ப்ராஹ்மணஃ ஸ்தாநம் நசேஹ ஜாயதே புநஃ ॥’ வர்ணச்ரம தர்மங்களை யநுஷ்டிப்பவன் வேதாத்யயந ஹீநனாயிருந்தாலும், திரும்பிவருவதில்லாத பரமபதத்தை யடைவானென்று, வஸிஷ்டரும, ‘ந சலதி நிஜவர்ணதர்மதோ யஸ் ஸமமதிராத்மஸுஹ்ருத் விபக்ஷபக்ஷே । ந ஹரதி ந ச ஹந்தி கிஞ்சிதுச்சைஃ ஸிதமநஸம் தமவேஹி விஷ்ணுபக்தம் ॥’ யாவனொருவன் தன்வர்ணச்ரம தர்மத்திலிருந்து நழுவாமலும், சத்ருமித்ர உதாஸீனர்களிடத்தில் ஸமபுத்தியுடன் இருந்து, பிறர் சொத்தை அபஹரியாமலும் மிருப்பனே, பரிசுத்தமான மனதையுடைய அவனை விஷ்ணுபக்தனென்று எண்ணவேண்டு மென்று, பராசர மஹர்ஷியும் அருளிச்செய்தார்கள்.



முடிவுரை:— ஆக இவ்வளவால், ஸுத்துக்களின் ஸ்வரூபமும், அவர்களின் லக்ஷணமும், ஆசாரமின்ன தென்பதும், ஸதாசாரத்தை விட்டால் உண்டாகும் கெடுதல்களும், ஆசாரத்தினல் இந்த வுலகத்தில் நன்மை பெறலாமென்றும், ஆநுஷங்கிகமாய் எல்லாபலங்களையும் அடையலா மென்பதும், தன் கருமம் செய்யப்பிறருகந்தார், என்று சொல்லுகிறபடியே ஸதாசாரத்தை அநுஷ்டிப்பவன் எல்லோராலும் கொண்டாடப்படுவன் என்றும் தினந்தோறும் பிரும்மத்தின் தியானம் செய்யவேண்டியதவச்ய மாகையாலும் அந்த தியானத்திற்கு மனது சுத்தமாயிருக்க வேண்டுகையாலும், அப்படி மனது சுத்தமாகவேண்டியதற்கு பாவங்கள் தொலையவேண்டிய தாகையால் அதற்குக் கர்மங்களை பலத்தில் ஆசையில்லாமலும்,நான் செய்கிறேனென்னும் அகங்காரமில்லாமலும் அநுஷ்டித்து வந்தால், ‘ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவஃ ॥’ என்று, ஸர்வகர்ம ஸமாராத்யனுன பகவான் ஸதாசாரத்தினல் வேண்டிய பலத்தைக் கொடுப்பா னுகையால் ஸதாசாரம் ஆவச்யக மென்று நிஷ்கர்ஷிக்கப்பட்டது.

காடந்தேத்தி, வே. கோபாலாசார்யர்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ.

# ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தமும் வைதிகமர்யாதை நிரைவும்.

(தொடரும்.)

யஸ்ஸாத்ய ஸாத்ய விரோதிதம் தஸ்ஸாத்ய ஸாத்ய ஸத்ஸஃ ப்ராஹ்மணஃ । யதநந்தாகாஶ்ஸர்வேஷாம் க்ருதம் ஶரணாகதிஸ்ஸ்ரீயாஸ்ஸீஸந்தா ஶ்ருதஃ ॥

ஸ்ரீவைஷ்ணவர்களாகிறார் ‘ஸர்வேஷாம் ஏவ தர்மாணாம் உத்தமோ வைஷ்ணவோ விதிஃ’ சேதநர்களுடைய ச்ரேயஸ்ஸுக்கு ஸாதநமாக விதிக்கப்பட்டும், சாக்தம் சைவம் கௌமாரம் காணபத்யம் என்று சொல்லப்பட்ட தர்மங்கள் எல்லாவற்றுள்ளும் மேலானதாய், ‘ப்ராஹ்மணம் ஶிக்ஷாஸம்ய

ஶூத்3ரா தே3வதா ஸ்ம்ருதா:, ப்ரதிபா3லாந வைஷம்யே ப2லாத்3 ப்4ரஷ்டம் ந ஸம்ஶய: ||' என்கிறபடியே அவ்வோதேவதா பஜநத்தால் வரும்பலன் குறைவுபட்டுக்கிடப்பதோடு ஸ்வரூப அநநுரூப முமானபடியால் இனி இதுக்கவ்வருயில்லை யென்னும்படி உத்க்ருஷ்டதமமா யிருப்பதுமான விஷ்ணுவென்னும் பெயருடைய பரமபுருஷனிடத்தில் கரணத்ரயத்தாலும் பண்ணும் ஆராதநமே யாகும், என்கிற ப்ரமாணத்தை யனுஸரித்து மறந்தும் புறந்தொழா மாந்தர்களாய், 'ஶங்க2சக்ராதி3தா4ரணம் பஞ்சஸம்ஸ்காரம் பாரம்பர்யவேத3நம், பதிவ்ரதாக3ணாநாம் வலயாதி3 விலக்ஷணம்' கைவளை மாங்கல்ய ஸூத்ரம் முதலான ஆபரணங்கள் ஸ்த்ரீகளுப் பதியினால் வரிக்கப்பட்டமைக்கு ஸூசகமாவது போல சங்கசக்ராதி அங்கநமும் சேதநர்களுக்குப் பரமபுருஷனுடன் ஸம்பந்த முண்டானமைக்கு ஜ்ஞாபகமாகிறது, என்றும் 'யே பா3ஹுமூலபரிசிஹ்நித ஶங்க2சக்ரா யே வா லலாடப2லகே லஸதூ3ர்த்4வபுண்ட்3ரா: | யே கண்ட2லக்3நதுலஸீநலிநாக்ஷமாலா: தே வைஷ்ணவா:' (இருபுயங்களிலு மேந்தின திருவிலச்சினை யுள்ளவர்களாய் நெற்றியிற்றேன்றும் ஊர்த்வபுண்ட்ர முள்ளவர்களாய் கழுத்தில் தொங்காநின்றுள்ள துளஸீதாமரை மணிகளின் மாலைகளையுடையவர்களா யிருப்பாரெவரோ அவர்கள் வைஷ்ணவர்கள்) என்றும் சொல்லுகிறபடியே வைஷ்ணவர்களுக்கே உரித்தான சிந்ந முள்ளவர்களாய், 'ப4க்திரவ்யபி4சாரிண்யா தே3வதே3வே ஜநார்த்த3நே | ஶ்ரேயாம்ஸி தஸ்ய ஸித்3த்4யந்தி ப4க்திமந்தோ யதோ(அ)ர்ஜுந: |' (தேவதேவனான பகவானிடத்தில் அவ்யாஜமான பக்தியுள்ளவர்களுக்கு எல்லாவிதமான நன்மைகளும் தன்னடையே ஸித்திக்கும்) என்றும் 'ஏகோ(அ)பி க்ருஷ்ணஸ்ய க்ருத: ப்ரணாமோ த3ஶாஶ்வமேதா4வப்4ருதே2ந துல்ய: | த3ஶாஶ்வமேதீ4 புநரேதி ஜந்ம க்ருஷ்ணப்ரணாமீ ந புநர்ப4வாய ||' (கண்ணபிரான் திருவடிகளில் ஒருதடவைசெய்த ப்ரணாமமும் சரிவர அனுஷ்டித்து முடித்த பத்து அச்வமேதங்களோ டொப்பாகும். ஆனால் அவன் மறுபடிவந்து பிறப்பான் கண்ணனை தெண்டனிட்ட இவனோ பிறப்பறுத்து நிற்பான்) என்றும் 'தௌ பாதௌ3 ஸப2லௌ பும்ஸாம் விஷ்ணுஸத3நகா3மிநௌ | தௌ கரௌ ஸார்த்த2கௌ ஸ்யாதாம் ஹரிபூஜாபராயணௌ | தே நேத்ரே ஸுக்ருதே ஸ்யாதாம் யே ஜநார்த்த3நத3ர்ஶநே | ஸா ஜிஹ்வா ப்ரோச்யதே ஸத்3பி4: ஹரிநாமபராயணா ||' (எம்பெருமானுடைய ஆலயத்தை நோக்கிச் செல்லும் பாதங்களும்அவன் திருவடிகளில்பண்ணும்அர்ச்சனத்தையேப்ரதான



வ்ருத்தியாக வுடைய கைகளும் அவன் திருமேனியின் ஸௌந்தர்யத்தை நோக்கிக் கொண்டிருக்கும் கண்களும் பகவந்நாமங்களை ஸதா உச்சரித்துக்கொண்டிருக்கும் நாவும் மஹத்தான பாக்கிய முள்ளவைகள், ஸபலமானவைகள், என்று ஸத்துக்களால் அறுதியிடப்பட்டது) என்றும், 'ஸத்யம் வச்மி ஹிதம் வச்மி ஸாரம் வச்மி புந: புந: | அஸாரே(அ)ஸ்மிந் ஸம்ஸாரே ஸாரம் யத்3விஷ்ணுபூஜநம் ||' ஶ்ரோதாக்களுடைய புத்தியிலமரும்படி ஸத்யமானதாயும் ஹிதமானதாயும் ஸகலப்ரமாண ஸாரமானதாயு மிருப்பதொரு விசேஷம் சொல்லுகின்றேன். அதேதெனில், தாபத்ரய தப்தமாய் ஸாரமற்றுக்கிடக்கும் இஸ்ஸம்ஸாரத்தில் ஸாரமாயுள்ளது விஷ்ணுபூஜநம் ஒன்றேயாகும், என்றும் நிஷ்கர்ஷித்துச் சொல்லப்படுகிற மநோவாக்காயங்க ளென்கிற கரணத்ரயத்தினுடைய த்4யாநஸ்தவப்ரணாமாதி3 ரூபங்களான வ்யாபாரங்களைத்தும் 'ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் உத்3த்4ருத்ய பு4ஜமுச்யதே | வேதா3ச்சா2ஸ்த்ரம் பரம் நாஸ்தி ந தை3வம் கேஶவாத் பரம் ||' என்றபடி கேட்டவர்கள் உறுதிபாடடைவதற்காக கையை உயரவெடுத்து முன்னால், ஸத்யமிட்டுச் சொல்லுகின்றேன், வேதத்தைக் காட்டிலும் உத்க்ருஷ்டமான ப்ரமாணம் வேறொன்றில்லை, கேசவனைக்காட்டிலும் உயர்ந்ததைவமும் வேறொன்றில்லை, என்று நிர்ணயிக்கப்பட்ட ஸர்வாதிகனை எம்பெருமான் திருவடிகளிலேயே செய்துகொண்டு தொண்டு பூண்டிருப்பவர்கள்.

இவர்களுடைய ஸித்தாந்த மாகிறது, அர்த்தபஞ்சகத்தை யுள்ளபடி யறிந்து அந்த ஜ்ஞானாநுரூபமான அநுஷ்டாந முள்ளவர்களாய் சரீராவஸாநத்தில் வித்யையின் மஹிமையால் அர்ச்சிராதி வழியேசென்று அந்தமில் பேரின்பமயமான திருமாமணிமண்டபத்தில் அடியார்கள் குழாங்களை யுடன்கூடி அநுபவ கைங்கர்யங்களாகிற அமுதவெள்ளத்தாலும் சிறப்புடையவர்களாகை.

அர்த்தபஞ்சகமாவது - ஆத்மஸ்வரூபம், ஈச்வரஸ்வரூபம், பலஸ்வரூபம், உபாயஸ்வரூபம், விரோதி ஸ்வரூபம், என்னப்படுமவை.

இவற்றில் ஆத்மஸ்வரூபத்தை யுள்ளபடியறிகையாவது 'ஆத்மா ஶுத்3தோ4(அ)க்ஷர:' (ஜீவன் பரிசுத்தன், விகரிக்கும் தன்மையற்றவன்) என்றும் 'ஆத்மா ஜ்ஞாநமயோ(அ)மல:' - (ஜீவன் ஜ்ஞானமயன், ஸ்வபாவத்தால் ஹேயகுணமற்றவன்) என்றும் சொல்லுகையாலே தேகம் இந்திரியம் மனஸ் ப்ராணன் ஜ்ஞானம் என்னும் இவைகளில் வேறுபட்டவனாகவும், 'ஜ்ஞாநாநந்தை3கலக்ஷண:'

'ஜ்ஞாநாநந்தைக லக்ஷணம்' என்கையாலே ஜ்ஞாநாநந்தங்களையே வடிவாக வுடையவனாகவும், 'அஜோ நித்ய: ஶாஶ்வதோயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே', (சரீரங்கள் அழியினும் தானழியாமல் நிலையுள்ளவனாய் பழையனா யிருப்பன்) என்கையாலே நித்யனாகவும், 'ஏஷோணுராத்மா சேதஸா வேதிதவ்ய:' (இந்த ஜீவாத்மா அணுபரிமாண முள்ளவன் மனஸால் அறியத்தக்கவன்) என்றும் 'ஆராக்ரமாத்ரோ ஹ்யவரோபி த்ருஷ்ட:' என்றும் சொல்லுகையாலே அணுவாகவும், 'ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி' என்கையாலே ஈஶ்வரனுக்கு ஶரீரமாகவும் நியாம்யனாகவும் தார்யனாகவும், 'தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:' என்கையாலே ஈச்வரனிடத்து ஸஹஜ தாஸ்யத்தை யுடையனாகவும், 'பரகதாதிஶயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ ஶேஷ: பர: ஶேஷீ' என்று நிஷ்கர்ஷித்த சந்தன, குஸும, தாம்பூலாதிகளைப்போலே, அவனுக்கிஷ்டவிநியோகார்ஹமா யிருக்கையாகிற சேஷத்வத்தையே ஸ்வரூபமாயுடையனாகவு மிருக்கு மென்றறிகை.

ஈஶ்வர ஸ்வரூபத்தை யுள்ளபடி யறிகையாவது, 'தத்ப்ரஹ்ம பரமம் நித்யமஜமக்ஷயமவ்யயம் । ஏகஸ்வரூபம் து ஸதா ஹேயாபாவாச்ச நிர்மலம்' என்கையாலே அசேதநத்திலுள்ள பரிணாம மென்ன சேதநகதங்களான அஜ்ஞாந துக்க பாரதந்த்ரயங்களென்ன இவைகள் முதலான தோஷங்களுக்கு மாறானவன் என்றும், 'நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்' என்கையாலே காலபரிச்சேதம் தேசபரிச்சேதம் வஸ்துபரிச்சேதம் ஆகிய மூன்று மில்லாதவ னென்றும், 'விஜ்ஞாநகந:' 'ஆநந்தம் ப்ரஹ்ம' என்கையாலே ஜ்ஞாநாநந்த ஏக ஸ்வரூப னென்றும் 'பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச' என்கையாலே ஜ்ஞாநம் சக்தி துடக்கமான கல்யாணகுணகண பூஷிதனென்றும், 'ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்' என்றும் 'ஸ்ருஷ்டௌ ஸ்ருஜதி சாத்மாநம் விஷ்ணு: பால்யம் ச பாதி ச । உபஸம்ஹ்ரியதே சாந்தே ஸம்ஹர்தா ச ஸ்வயம் ப்ரபு: ॥' என்றும்சொல்லுகையாலே ஸகலஜகத்துக்கும் ஸ்ருஷ்டிஸ் திதிஸம்ஹாரங்களுக்குக் காரணபூதனென்றும், 'காரணம் து த்யேய:' 'சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ்ஸுக்ருதி

நோர்ஜுந । ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப ॥' என்றும் சொல்லுகையாலே ஐச்வர்யகைவல்ய பகவத்ப்ராப்தி காமர்களான நான்குவித அதிகாரிகளுக்கும் ஆஶ்ரயணீயன் என்றும், '[illegible] ॥' என்கையாலே தர்மார்த்த காமமோக்ஷங்க ளென்கிற நான்குவித பலன்களையும் அதிகாராநு குணமாகக் கொடுக்குமவனென்றும், 'மூந்நீர்ஞாலம்படைத்த வெம்முகில்வண்ணனே' என்கையாலே விலக்ஷணமான திருமேனியையுடையவனென்றும், 'ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ', என்றும் 'தேவக்ஷேத்ரே வரே லோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்தந: । உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேஶ்வர: ॥' என்றும், தேவிமாராவார் திருமகள்பூமி என்றும் சொல்லுகையாலே உனக்கேற்கும் கோலமலர்ப்பாவை என்னும்படியான வைலக்ஷண்யத்தை யுடையவளாயும், 'ஸைவம் ஶரணம் ஹிதை:' என்னுமவளாகையாலே சேதநர்க்கு ஸ்வதோஷத்தை நினைத் தஞ்சவேண்டாதபடி கண்ணழிவற்ற புருஷகாரபூதையாயும், 'மாதா' என்கையாலே ஜநநீத்வப்ரயுக்தமான வாத்ஸல்யாதி சயத்தையுடையளாயும், அகலகில்லேனிறையு மென்றலர்மேல் மங்கையுறைமார்பா' என்கையாலே சேதநர்களுடைய அபராதத்தையும் ஈச்வர ஸ்வாதந்த்ரயத்தையும் கண்டஞ்சி அவன்மார்பில் நித்யஸாந்நித்யம் பண்ணுமவளாயும், '[illegible]' என்கையாலே காருண்யமே ஓர் வடிவெடுத்தது என்னும்படி யிருப்பவளாயும் 'கோலத்திருமாமகளோடுன்னைக் கூடாதே, என்கையாலே ஈச்வரனோடொக்க ப்ராப்யையாயுமிருக்கும் ஆயாநபிஷிக்தையான பெரியபிராட்டியார்க்கும் '[illegible] நீளா நாயக:' என்று அவளோடொப்பிட்டுச் சொல்லலாம்படி யிருக்கும் பூமிநீளைகளான மற்றையிரண்டு பிராட்டிமார்க்கும் அநுரூபநாயகனென்றும் அறிகை.

பல ஸ்வரூபத்தையுள்ளபடியறிகையாவது, 'தர்மார்த்தகாமமோக்ஷாக்யா: புருஷார்த்தா உதாஹ்ருதா:' என்கிற படியே நான்குவகைப்பட்ட புருஷார்த்தங்களில் வைத்துக்கொண்டு-தர்ம புருஷார்த்தமாவது - இஷ்டாபூர்த்தங்களென இருவகைப்படும்; அதில் இஷ்டம், யாகம்செய்தல் முதலானது; பூர்த்தமாவது தடாக, நிர்மாணம் ஆலயபிரதிஷ்டை, முதலானது என்றும்,

அர்த்த புருஷார்த்தமாவது - தங்கள்தங்கள் வர்ணாநுரூபமாகவும் ஆச்ரமாநுரூபமாகவும் ஆர்ஜ்ஜிதங்களான ஸ்வர்ணம் வெள்ளி தான்யம் முதலியவை என்றும்; காமபுருஷார்த்தமாவது ஐஹலௌகிக மென்றும் பாரலௌகிகமென்று மிருவகைப்படும்–இஹலோகத்தில் காமமாவது பிதா மாதா ரதநம் தநம் தாம்யம் வஸ்த்ரம் அந்நபாநம் புத்ர மித்ர களத்ர பசுக்ருஹ க்ஷேத்ரசந்தந குஸும தாம பூலம்முதலான போக்யபதார்த்தாநுபவத்தால்வந்த ஸுகமென்றும்; பரலோகத்தில் காமமாவது இதில்வேறுபட்டதாய் தேஜோரூபமான ஸ்வர்க்காதிலோகங்களிலேசென்று பசி தாஹ சோக மோஹ ஜராமரணாதி களின்றிக்கே ஆர்ஜித்த புண்யத்துக்கீடாக அம்ருதபாநம்பண்ணி அப்ஸரஸ்ஸுக்களோடே சப்தாதிவிஷயாநுபவம் பண்ணுகையென்றும்; மோக்ஷபுருஷார்த்தமாவது ஆத்மாநுபவமென்றும் பகவதநுபவமென்றும் இரண்டுவிதமாயிருக்கும்; அதில் ஆத்மாநுபவமாவது 'ஜ்ஞாநேந மோக்ஷாய ஸாஸ்ருத்ய யதந்தியே।' என்றும் 'பிறவித்துயரற ஞானத்துள் நின்று' என்றும் சொல்லுகிறபடியே ஆத்மஸ்வரூபத்தை மறைக்கும் ப்ரக்ருதி விடுவதற்காக ஈச்வரனை உபாஸித்து உபவித்தபடி அடையப்பெற்ற ஸ்வயம் ப்ரகாசமாய் நித்யமாய் ஜ்ஞாநாநந்தமயமான ஸ்வாத்மாவினுடைய அநுபவத்தில் நியதனாகை யென்றும், பகவதநுபவமாவது ஆறு விதமான பாவவிகாரத்திற் கிருப்பிடமாய் பகவத் ஸ்வரூபத்தை மறைத்து விபரீத ஜ்ஞாநத்தை யுண்டுபண்ணி ஸம்ஸாரத்தை வளர்க்கும் ஸ்தூலசரீரத்தை யுபேக்ஷையோடே போகவிட்டு ஸுஷும்நா நாடியின் வழியாலே சிரக்கபாலத்தைப் பேதித்துக்கொண்டு புறப்பட்டு அர்ச்சிராதிவழியே சென்று விரஜாநதீ ஸ்நாநத்தால் ஸூக்ஷ்ம சரீரத்தைக் கழித்து அமாநவ கரஸ்பர்சம் பெற்று சுத்த ஸத்வமயமாய் பகவதநுபவ போக்யமான அப்ராக்ருத திவ்யசரீரத்தை அடைந்து அந்தமில் பேரின்ப மயமான திருமாமணி மண்டபத்தை யடைந்து 'ஸதா பச்யந்தி ஸூரய:' என்கிறபடியே நித்யாநுபவம் பண்ணும் நித்யமுக்தர்களோடு ஒரு கோர்வையாய் லக்ஷ்மீஸஹிதனைப் பூமிநீளாநாயகனைப் விலக்ஷண விக்ரஹ யுக்தனை ஸ்ரீவைகுண்டநாதனை நித்யாநுபவம் பண்ணுகை யென்றும் அறிகை.

(தொடரும்)

வேளுக்குடி சேஷாத்ரி ஆசார்யர்.

## ஶ்ரீரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹ:
### சரமஶ்லோகாதிகார: த்ருதீய:
(தொடர்ச்சி.)

ஏவம் பூர்வார்த்தேந ப்ரபத்த்யநுஷ்டாநம் விதாய தந்நிஷ்டமதிகாரிணம் உத்தரார்த்தேந ஸர்வபாப மோக்ஷண ரூபம் தத்ஃலமுபதேஶ பூர்வகம் நிஶ்ஶோகயதி அஹம் த்வேத்யாதிநா ॥

(அஹம்) ஸர்வபாப மோக்ஷணோபயுக்த ஜ்ஞாந ஶக்த்யாதி ஸாமக்ரீ யுக்த: ।

(த்வா) ந்யஸ்தபரதயா நிர்பரம் த்வாம் ।

(ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) அயமர்த்த: ஸர்வபாப மோக்ஷண ப்ரகார: ஸ்வயமேவாசார்யை: ஸ்பஷ்டமபிஹித:—

'ப்ராரப்தேதர பூர்வபாப மகிலம் ப்ராமாதிகம் சோத்தரம்
ந்யாஸோ நக்ஷ்யதி ஸஞ்சிதம் ப்ரஶமயேத் ப்ராரப்தமம்ஶம் ச ந: ।
தீபூர்வோத்தர மாபநேத ஜநயேத் ஜாதே து சேத் தஸ்கரே
ப்ராயஶ்சித்தமதோ பிரஹஸ்ய ந்யதி கஶ்சிந்தயா கோரஶிக்ஷா ....'

## ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம்
### மூன்றாவது சரமச்லோகாதிகாரம்
(முன் தொடர்ச்சி)

இப்படி முற்பகுதியினால் ப்ரபத்தி யநுஷ்டானத்தை விதித்து பராந்யாஸம் செய்த அதிகாரியை, பிற்பகுதியினால் எல்லாபாபங்களினின்றும் விடுவிக்கையாகிற அதன் (ப்ரபத்தியின்) பலத்தை உபதேசிப்பதை முன்னிட்டு 'நான் உன்னை' இத்யாதியால் (பகவான்) சோகமில்லாதவனாக்குகிறான்.

(நான்) எல்லா பாபங்களையும் போக்குவிப்பதற்கு உபயோகமான ஜ்ஞாநம் சக்தி முதலிய ஸாமர்த்யங்களை யுடையவன் என்றபடி.

(உன்னை) பாரத்தை (என்னிடம்) போட்டுவிட்டபடியால் ஒரு பாரமுமில்லாத உன்னை.

(எல்லா பாபங்களினின்றும் விடுவிக்கக்கடவேன்) எல்லா பாபங்களினின்றும் விடுவிக்கும் ப்ரகாரம் ஆசார்யர் தம்மாலேயே (இங்ஙனம்) தெளிவாக உரைக்கப்பட்டது—'ப்ராரப்த மொழிந்த முன்செய்த பாபங்க ளெல்லாவற்றையும், (ப்ரபத்திக்குப்) பின்னர் புத்திபூர்வமல்லாமல் செய்யப்படுமவற்றையும், நாமிசையாத ப்ராரப்தத்தின் அம்சத்தையும் ப்ரபத்தியினால் ஒழித்துவிட்டும்; புத்திபூர்வமான பாபங்களைப் பிறகு உண்டாக்குவதில்லை யாகையாலும், உண்டானாலும் ப்ராயச்சித்தங்களால் அவை கழிவதாலும், கடின ப்ரக்ருதியாயிருந்தால் அவனை உசித சிக்ஷைகளினால் நிர்த்தோஷனாக்கியும், நம்மை சரணமடைந்தவனை பகவான் அங்கீகரிக்கின்றான்'—என்று.

அயமர்த்த:— த்விவிதம் ஹ்யகம் பாபம், பூர்வமுத்தரஞ்சேதி। பூர்வாகஞ்ச த்விவிதம், ப்ராரப்தம் அப்ராரப்தஞ்சேதி। ப்ராரப்தஞ்ச த்விவிதம், அநபிமதம் அபிமதஞ்சேதி। உத்தராகஞ்ச த்விவிதம் புத்திபூர்வகம் அபுத்திபூர்வகஞ்சேதி। புத்திபூர்வகஞ்ச த்விவிதம் க்ருதப்ராயச்சித்தம் அக்ருதப்ராயச்சித்தஞ்சேதி। தத்ர ப்ராரப்தவ்யதிரிக்த பூர்வாகஸ்ய அபுத்திபூர்வகோத்தராகஞ்ச விநாசம் பக்திநிஷ்டஸ்ய நிவர்த்யதே। தத்ர பூர்வாகஸ்ய விநாச: உத்தராகஸ்ய சாச்லேஷ:। ப்ரபத்திநிஷ்டஸ்யது அப்ராரப்த பூர்வாகவது அநபிமதாம்சோ நிவர்த்யதே, 'உபாயபக்தி: ப்ராரப்த வ்யதிரிக்தாக நாசிநீ। ஸாத்யபக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ ॥' இதி வசநாத்। உபாய ரூபா பக்தி: உபாயபக்தி:। ஸாத்யா பக்தி: யயா ஸா ஸாத்யபக்தி:। அயமர்த்த:— ப்ரபத்திரேவ உபாயாந்தர ஸாத்யாம் பக்திம் ஸ்வயம் அங்கபூதா ஸதீ ப்ரஸாதயதி; ஸாத்யாந்தரம் பக்திம் ஸ்வாதந்த்ர்யேண ஸ்வயமேவ ஸாதயதி। ப்ராரப்தஞ்சாநீப்ஸிதம் நாசயதி। அதோ பக்தே: ப்ரபத்தி: பூயஸீதி। அதஏவ தச்சேஷ தேஹாவஸாந ஏவ மோக்ஷ:॥

ஆர்த்த த்ருப்த விபாகோ(அ)ப்யநேந ந்யாயேந ஸித்த:। யே ப்ரபந்நா: சரணாகதி மந்த்ரோச்சாரணமேவ ப்ரயாண ஸம்பாதநீக்ருத்ய பரமபதம் ப்ராப்நுவந்தி த ஏவ ஆர்த்தா:; யே து தேஹாவஸாந விலம்பம் ஸஹந்தே தே த்ருப்தா:; இதி விபாக:।

உத்தராகேஷு அபுத்திபூர்வாம்சோ பக்திநிஷ்டஸ்யேவ ப்ரபத்திநிஷ்டஸ்யாபி ந ச்லிஷ்யதே। விவேகிநஸ்து ப்ரபந்நா: புத்திபூர்வகம் உத்தராகமேவ நாரபந்தே। மத்யமா: ப்ரபந்நா: ஆரப்தம் பாபம் யதாதிகார ப்ராயச்சித்தேந பரிஹரந்தி। தத்ராபி தத்பாபாநுரூபே ப்ராயச்சித்தேஷு சக்தா: ஸத்யம் தாந்யநுதிஷ்டந்தி। அசக்தாஸ்து புந: ப்ரபத்திரூப ப்ராயச்சித்தம், அந்யதா தீவ்ரம்

---

இதனர்த்தம் இங்ஙனே:—முன்செய்த தென்றும் பின் செய்யப்போவ தென்றும் பாபம் இருவகை யல்லவா; முன்செய்ததும் இருவகை, (பலன் கொடுக்க) ஆரம்பித்தும் ஆரம்பிக்காததும் என்று. ஆரம்பித்ததும் இருவகை, நம்மால் ஒப்புக்கொள்ளப்பட்டதும் ஒப்புக்கொள்ளப்படாததும், என்று. ப்ரபத்திக்குப்பிறகுசெய்யும் பாபமும் புத்திபூர்வமானதும் புத்திபூர்வமல்லாதது மென்றும் இரண்டுவிதம். புத்திபூர்வத்திலும், ப்ராயச்சித்தம் பண்ணப்பட்டதும், பண்ணப்படாதது மென்று இரண்டு ப்ரகாரம். இவற்றில் ப்ராரப்தமொழிந்த முன்செய்த பாபங்களும் புத்திபூர்வமல்லாத ப்ரபத்திக்குப் பிறகு செய்யும் பாபங்களும்,உபாஸநத்தின் ஆரம்ப ஸமயத்திலேயே பக்தியோக நிஷ்டனுக்குக் கழிந்து விடுகின்றன.அங்கு பூர்வபாபத்துக்கு விநாசமும் உத்தர (மேல்வரக்கூடிய) பாபத்துக்கு ஸம்பந்த மின்மையும் (சொல்லப்பட்டது). ப்ரபத்தி நிஷ்டனுக்கோ வென்றால் ப்ராரப்தமல்லாத பூர்வபாபத்தைப்போல் ப்ராரப்தத்திலும் இவன் ஒப்புக்கொள்ளாத அம்சம் போய்விடுகின்றது; 'உபாய பக்தியானது ப்ராரப்தமல்லாத பாபங்களைப் போக்குகின்றது. * ஸாத்ய பக்தியோ (ப்ரபத்தியோ) வென்றால் ப்ராரப்தத்தை நிவ்ருத்திப்பதிலும் பலமான காரணம் என்னும் வசனத்தினால். உபாயரூபமான பக்திக்கு உபாயபக்தி யென்று பெயர். பக்தியானது யாதொன்றினால் ஸாதிக்கப்படுகிறதோ அது ஸாத்யபக்தி. இது அர்த்தம்:—ப்ரபத்தி தான் அங்கமாகவிருந்து கொண்டு வேறொரு உபாயமாயிருக்கும் பக்திக்கு உபகாரமாயிருக்கிறதல்லா; பலமாயிருக்கும் பக்தியையோ வென்றால் வேறொன்றையும் அபேக்ஷிக்காமல் தானே ஸாதித்து விடுகின்றது; ப்ராரப்தமான பாபத்தையும் நாசம் பண்ணிவிடுகிறது. இதனால் பக்தியைவிட ப்ரபத்தி பெரியது - என்று. ஆனது பற்றியே இந்த தேஹம் முடிந்த உடனேயே மோக்ஷம்.

(ப்ரபந்நருக்குள்) ஆர்த்தர் த்ருப்தர் என்னும் விபாகமும்கூட இந்த ந்யாயத்தினாலேயே ஸித்திக்கிறது. யாதொருவர்கள் சரணாகதி மந்த்ரத்தை உச்சரிப்பதையே ப்ரயாண சங்கநாதமாய்ச் செய்துகொண்டு பரமபதத்தை அடைகிறார்களோ அவர்களே யல்லவோ ஆர்த்தர்கள்! சரீரத்தின் முடிவுவரையில் எவர்கள் தாமதத்தைப் பொறுக்கின்றார்களோ அவர்கள் த்ருப்தர்கள், என்று வகுப்பு.

மேல்வரப்புகும் பாபங்களில் புத்திபூர்வமல்லாத அம்சம் பக்தியோக நிஷ்டனைப்போல் ப்ரபத்தி நிஷ்டனிடத்திலும் ஒட்டுகிறதில்லை. விவேகிகளான ப்ரபந்நரோ வென்றால் புத்திபூர்வமான உத்தர (பின் காலத்திய) பாபங்களை ஆரம்பிக்கவே மாட்டார்கள். மத்யமர்களான ப்ரபந்நர்கள் தங்கள் அதிகாரத்துக்குள்ள ப்ராயச்சித்தத்தினால் (உத்தரபாபத்தைப்) பரிஹரிக்கிறார்கள் அங்கும் அந்தந்தப் பாபத்துக்குத் தகுந்த ப்ராயச்சித்தங்களில் சக்தியிருக்கும்

---

* ஸாத்யபக்தி என்றால் ப்ரபத்திக்குப் பெயர் என்று ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஸ்ரீதேசிகன் அருளிச்செய் திருக்கிறார்.

மாஸ; 'அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே, இதி வசநவிரோதாச்ச । ...
...ப்ரபத்த்யாக்ஷம் ப்ரபத்தி விதாந ஶாஸ்த்ரே, 'அபாய ஸம்ப்லவே
ஸத்ய: ப்ராயஶ்சித்தம் ஸமாசரேத் । ப்ராயஶ்சித்திரியம் ஸாத்ர யத்புந: ஶ
ரணம் வ்ரஜேத் ॥' இதி—அத்ரேதி ப்ரதிபாதநாத் - ப்ராயஶ்சித்தாஸா
மர்த்யம் பராம்ருஶதி; அஸாமர்த்யஸ்ய தத்ர தத்ர நியதத்வாத் । நசை
தாவதா புந: ப்ரபத்தி விரோத:; ஸம்ஸார மோக்ஷணாய க்ருதாத்
புந: ப்ரபத்தே:; தாத்காலிக புத்திபூர்வ உபஶமநாய க்ருதா
யாஸ்த ப்ரபத்தே: । அநேக ஃபலஸித்த்யர்த்தம் ப்ரபத்தி தோஷ: । அந
தாவ தேதாதிவத் கடிந ப்ரக்ருதயோ புத்திபூர்வாபராதி கநந்யவி
... அல்பகாநி யெஸதோ ... ஸதி ந ப்ராயஶ்சித்தம் சரந்தி
... விப்ரியே பாத்ராதீநாம் விதாத்ருவமோய இவ ஹிதை ஷி
... புத்திபூர்வே ... ப்ராதேந ஸ்வோசித நிவாரணம் க்ரிய
தே । உக்தம் ச வாஸ்யை:—'விவேகிநாம் ப்ரபந்நாநாம் புத்திபூர்வே
... நாநுஷ்ட்டி: । ... நுதாபாதி:, ஶிக்ஷா கடிநசேதஸாம்' இதி ॥

போது அவைகளையே அநுஷ்டிக்கிறார்கள். அதில்லாவிடில் மறுபடியும் ப்ர பத்திசெய்வதே ப்ராயச்சித்தம்; அல்லாவிடில் அதி ப்ரஸங்கதோஷமுண்டாவதாலும், 'தானபேக்ஷித்ததை வேறொன்றால் ஸாதிக்கமுடியாதபோது, என்றர்த்தமுள்ள வசநத்தின் விரோதம் வருமாகையாலும் (இது வர்த்தம்), இதை அபிப்ராயத்திற் கொண்டே ப்ரபத்தியை விதிக்கும் சாஸ்த்ரத்தில் 'அபாயம் (பாபம்) ஸம்பவித்து விட்டால் உடனே ப்ராயச்சித்தம் செய்யக்கடவன்; இங்குற்ற ப்ராயச்சித்தமாவது, மறுபடியும் ப்ரபத்தி செய்யக்கடவன் என்பதே' என்று சொல்லப்பட்டது. அத்ர (இங்கு) என்னும் பதத்தினால் அதற்கு முந்திய பதத்தில் சொல்லப்பட்ட ப்ராயச்சித்தம் பண்ணும் ஸாமர்த்ய மில்லாமையைப் பராமர்ச்சிக்கிறது; அங்கங்கேயும் ஸாமர்த்திய மில்லாவதன் நிச்சியமாய் யிருப்பானுகையால். இதனாலேயே மறுபடி ப்ரபத்தி (செய்வதற்)கு விரோதமில்லை; முன்செய்த ப்ரபத்தி ஸம்ஸாரத்தைக் கடப்பதற் காதலாலும், தற்காலத்தில் நடத்திய பகவதபசாரத்தைப் போக்குவதற்காக மறுபடியும் செய்யும் ப்ரபத்தி யாதலாலும். ஓரே பலத்துக்காகச் செய்தாலன்றோ மறுபடி ப்ரபத்தி செய்வது தோஷமாகும்? யாதொருவரோ வென்றால் நாம் முதலியவர்களைப்போல் கடின ஸ்வபாவத்தை யுடையவர்களாய் புத்திபூர்வமாக பகவதபசாராதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செய்துகொண்டும் ப்ராயச்சித்தமும் செய்கிறதில்லையோ, அவர்களுக்கு அடங்காத பிள்ளைகளை பிதாக்கள் முதலியவர்கள் சிக்ஷிப்பதை (போல் நமது) ஹிதத்தை விரும்பும் பகவனாலேயே லகுவான தண்டனையைக் கொடுப்பதால் அபசாரத்தைப் போக்குதல் செய்யப்படுகிறது. ஆசார்யரும் (இதை) 'விவேகிகளான ப்ரபந்நர்க்கு புத்திபூர்வ பாபங்களில் ப்ரவ்ருத்தி யுண்டாகாது; மத்யமர்களுக்கு அநுதாபம் முதலியவை (உண்டாகும்)); கடினபுத்திகளுக்குச் சிக்ஷை (விதிக்கப்படும்,)' என்றருளிச்செய்தார்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பூதத்தாழ்வார்

அருளிச்செய்த

# இரண்டாந்திருவந்தாதி.

அவதாரிகை.

(8) உகந்துன்னை வாங்கி யொளிநிறங்கொள் கொங்கை
யகங்குளிர வுண்ணென்று ளாவி—யுகந்து
முலையுண்பாய் போல முனிந்துண்டாய் நீயு
மலைபண்பா லானமையா லன்று.

(இ - ள்.) (பூதனையானவள்), உகந்து - (யசோதைப்பிராட்டியைப்போல) அன்பாற் பரிவுகொண்டு (நீ, தூங்கும்போது), உன்னை —, வாங்கி-தூக்கியெடுத்து, ஒளி நிறம் கொள் - (பால் விம்மியிருத்தலால்) ஒளிவிட்டு அழகு பெற்றுள்ள, கொங்கை - (தன்னுடைய) ஸ்தநத்தை, அகம் குளிர - மனம் குளிரும்படி, உண் என்றாள் - உண்ணென்று ஆதரத்தோடு சொன்னாள்; ஆனமையால் - ஆகையினாலே, நீயும்—, அன்று - (அவள் முலை தந்த) அப்போது, அலைபண்பால் - அலையெறிகிற [மிக்குள்ள], உன்ஸௌலப்ய குணத்தினாலே, முலையுண்பாய்போலே - மெய்யே ஸ்தந்யபானஞ் செய்பவனைப்போல உகந்து - (பெரும்பேறு பெற்றாற்போல) மனவுவப்புக்கொண்டு, முனிந்து - மனத்திற் சீறி, ஆவி - (அந்தப் பூதனையின்) உயிரை, உண்டாய் - உட்கொண்டாய்; (எ-று.)

கீழ்ப்பாசுரத்தில் தம்முடைய மனத்தைநோக்கி, 'ஆழியேந்தினான் பொன்மலர்ச் சேவடியே யோர்' என்றார்: அப்படி நாம் ஆச்ரயிக்குமிடத்தில், நமக்குப்ரதி பந்தகமுண்டானால் என்செய்வது; என்று ஒருசங்கைதோன்ற, அந்தப்ரதிபந்தகம் பூதனைபட்டபாடு படும், என்பதற்காகப் பூதனையைநிரஸித்த சரித்தை யநுசந்திக்கின்றார், இதில்: இனி நாம் ஆச்ரயிக்கு மிடத்தில் பொய்யுகப்புக் கொண்டு ஆச்ரயித்தல் கூடாதென்பதற்காக, இச்சரித்தை யநுஸந்திக்கின்றாரெனினுமாம்.

பூதனை தாயைப்போன்று மிக்கபரிவுகொண்டு முலைதரவும் நீஅவளுயிரைக்கொண்டது உமக்குஏதேனும் தீங்குஉண்டாயின் அடியவர்கள் பேரிடரில் மூழ்குவார்களே! என்று அந்த ஆச்ரிதரிடத்து நீ மிக்கபரிவுகொள்ளுகின்ற சீலவானானதாலாகும் 'அலைபண்பான்' என்று பாடமோதி, அலைபண்பான் ஆனமையால், அந்தப் பூதனை பண்பற்றவளானதனால், அவள் ஆவியுண்டாய்என்று உரைப்பினுமாம், "உண்டற்குரிய வல்லாப்பொருளை, யுண்டதுபோலச் செப்பலும் மரபே" என்பது தொல்காப்பியமாதலால், ஆவியுண்டாய், என மரபுவழுவமைதிபட அருளிச்செய்தது.' உண்பாய் போலே,' என்றுவழங்குவர். (அ)

(9) அன்றது கண் டஞ்சாத வாய்ச்சி யுனக்கிரங்கி
நின்று முலைதந்த விந்நீர்மைக்கு - அன்று
வரன் முறையால் நீயளந்த மாகடல்சூழ் ஞாலம்
பெருமுறையா லெய்துமோ பேர்த்து.

(இ - ள்.) அன்று - (பூதனை பிணமாகவிழும்படி நீ முலையுண்டு அவளுயிரை முடித்த) அக்காலத்தில், அது - (முலைகொடுத்தவள் இறந்துபட்ட) அதை, கண்டு - பிரதியட்சமாகப் பார்த்தும், அஞ்சாத - (முலைகொடுக்கின்ற நாமும் ஒருகால் இறந்துபடுவோமோ ;' என்று) பயப்படாத, ஆய்ச்சி - யசோதைப் பிராட்டியானவள், (இவனுக்கு யாது விளைவதாக இருக்கிறதோ! என்ற வயிற்றெரிச்சலாலே), உனக்கு இரங்கி - உன்னிடத்துப் பரிவு கொண்டு, நின்று - (தரையிலேகால்பாவி) இருந்து, முலை தந்த - முலைகொடுத்த, இந்நீர்மைக்கு - இந்தப் பெருங்குணத்துக்கு, — (நீ ஸ்வாமியும் இந்தப்ரபஞ்சமெல்லாம் உனது சொத்துமாக இருக்கிற), வரன் முறையால் - சிறந்த உறவினாலே, நீ - (ரட்சகனை நீ அளந்த அளந்துகொண்ட, மா கடல் சூழ் ஞாலம் - பெரிய கடலாலே சூழப்பட்ட பூமியானது, பேர்த்து - மாறுகி பெருமுறையால் - (இது) பெரிய செயலென்று சொல்லுதற்கு ஏற்றமுறைமையோடு எய்துமோ - பொருந்துமோ ! (எ - று.)

இப்பாசுரத்தில் பூதனையை நிரஸித்த வ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்த ஆழ்வார் ஸ்தந்யங்கொடுத்து பூதனை அதனாலே உயிரிழந்ததைக் கண்கூடாகக்கண்ட யசோதைப் பிராட்டி உனக்கு ஸ்தந்யங் கொடுத்தால் நமக்கும் ஒருகால் முடிவுநேருமோ, என்று அஞ்சவேண்டியிருக்க அவ்வாறு அஞ்சாமல் “ என்றும் எ[illegible]மகன் செய்வார்கள் அவ்வணமாவர்களே!’ என்று மங்களாசாஸனபர[illegible]மையோடு ஒப்பிட்டு நோக்குமிடத்து, அந்தணனை மஹாபலி என்னதெ[illegible] அபஹரித்தருளுண்டான வெக்கைதீர்ந்து குளிரும்படி பூமியை ரக்ஷகனான நீ உன[illegible]னாலே ஸ்பர்சித்து அளந்தது - அந்தப்பூமிக்கும் உனக்குமுள்ள ஸ்வஸ்வாமி பாவஸம்பந்தத்தாற் செய்ததாகையாலே,பெரியதாக எண்ணப்படமாட்டாதென்கின்றனர். எம்பெருமான் பூமியினிடத்து வைத்துள்ள ஸ்நேஹத்தைக் காட்டிலும், யசோதைப்பிராட்டி ஸ்ரீக்ருஷ்ணனிடத்து வைத்த ப்ரேமம் மிக்கதாகு மென்றபடி. (௯)

(10) பேர்த்தனை மாசகடம் பிள்ளையாய், மண்ணிரந்து
காத்தனை பல்லுயிரும் காவலனே —ஏத்திய
நாவுடையேன் பூவுடையேன் நின்னுள்ளி நின்றமையாற்
காவடியேன் பட்ட கடை.

(இ-ள்.) பிள்ளை ஆய் - சிறுகுழந்தையாயிருந்து, மா சகடம் - பெரியசகடத்தை, பேர்த்தனை - கட்டழியும்படி யுதைத்துத்தள்ளினாய்; காவலனே - ஸர்வரக்ஷகனானவனே ! மண் - பூமியை, இரந்து - (மஹாபலிசக்கரவர்த்தியினிடம்) யாசித்துப் பெற்று, (திருவடிகளாலே குளிர ஸ்பர்சித்து), பல் உயிரும் - எல்லாஆத்மாக்களையும், காத்தனை - ரக்ஷித்தருளினாய் ; நின் - (இப்படி ரக்ஷகனான உன்னை, உள்ளி நின்றமையால் - (ஆச்ரயித்தற்



கு உரியவனென்று) மனப்பூர்வமாக எண்ணியிருப்பதனால், ஏத்திய நா உடையேன் - (உன்னைத்) துதிப்பதையே ஸ்வபாவமாகவுள்ள நாவையுடையவனாயிருக்கிறேன் ; பூ உடையேன் - காயிகமாக அடிமைசெய்கைக்கு உபகரணமாக இருக்கிற) புஷ்பங்களையும் உடையவனாயிருக்கிறேன் ; அடியேன் - (உனக்கு) அடியவனாயிருக்கும் பெரும்பதவியைப் பெற்றான், பட்ட - (வெகுகாலமாகத் ! தேவதாந்தரங்களின் கால்களில் வீழ்வதனால்) அடைந்துள்ள, கடைஇழிவை, கா - (இனிவாராதபடி) பாதுகாத்தருள்வாயாக ; (எ - று.)

யசோதைப்பிராட்டியைப்போல உன்னிடத்து எனக்கு அதிமாத்திர ப்ராவண்யம் இல்லாவிட்டாலும் ; நீதான் ஆச்ரயித்தற்கு உரியவனென்ற எண்ணத்தைப்பெற்று உன்னை ஆச்ரயித்தற்கு உரிய இந்திரியங்களையும் திரவியங்களையும் பரிபூர்ணமாகக்கொண்டிருக்கின்ற நான் இவற்றையே பற்றுசாகக்கொண்டு உன்னுடையவனாயிருந்தும் முன்பெல்லாம்கண்ட கண்ட தேவதைகளின் காலிலும் விழுந்து அநுவர்த்தித்துப் பட்ட பொல்லாங்கெல்லாந் திருவடி பாதுகாத்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கின்றனரென்க. (பின்பார்) உடையவனை உடைமையைக்காத்தல் தகுதியே யென்பதுதோன்ற, ‘மண்ணிரந்து காத்தனை பல்லுயிரும் காவலனே ’’! என்கிறார். ஏத்திய என்ற இறந்தகாலப்பெயரெச்சம் காலமுழுவதும் துதித்தல் தன்மையுணர்த்திற்று. (௧0)

(11) கடைநின் றமரர் கழல்தொழுது நாளு
மிடைநின்ற வின்பத்த ராவர்—புடைநின்ற
நீரோத மேனி நெடுமாலே ! நின்னடியை
யாரோத வல்லா ரவர்.

(இ - ன்.) (இவ்வுலகத்தவர்), அமரர் கடைநின்று - (நம்மைக்காட்டிலும் பின்னும் நாலுநாள் ஜீவித்திருந்து சாகக்கடவரான பிரமன்முதலிய) தேவர்களுடைய வாசல்களைப் பற்றிநின்று,(அவ்வாதரான அவர்கள்மனமிரங்கித்தம்தம்காரியஞ்செய்யும் வரையிலும்), நாளும் - நெடுங்காலம், கழல் தொழுது - (அவர்களின்) காலில்வீழ்ந்து, (பரமபதத்தில் வந்து உன்னையநுபவிக்கவாவது இங்குஇருந்து உன்னை யாச்ரயிக்கவாவது முடியாமல்) இடை நின்ற - (இடறுகட்டையாக) நடுவேகிடக்கிற, இன்பத்தர் ஆவர் - (சுவர்க்கம்முதலிய) சுகத்தைப்பெற்று அநுபவிப்பார்கள் ; புடைநின்ற - (இவ்வுலகத்தைத்) சூழ்ந்து கிடக்கிற, நீர் ஓதம் - ஜலஸம்ருத்தியுடைய கடல்போன்ற [ச்ரமஹரமான] மேனி - திருமேனியையுடைய, நெடுமாலே - அளவிடமுடியாத பெருமையையுடையவனே ! நின் - ஸர்வரக்ஷகனான உன்னுடைய, அடியை - திருவடிகளை, ஓதவல்லாரவர் - எம்பெருமான் அநிஷ்ட நிவாரகனென்பதையுணர்த்துமாறு சிறுபிள்ளைப் பருவத்தில் தானே சகடாசுரனையொழித்து ஆச்ரிதர்க்குத் தன்னைத் தந்த சரிதையை, ‘பேர்த்தனைமா சகடம்பிள்ளையாய்’, என்றும், ஆச்ரிதரின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்விப்பவனென்பதை யுணர்த்துமாறு ஆச்ரிதனான இந்திரனுடைய வேண்டுகோளைத் தலைக்கட்டும் பொருட்டுத் தன்னை மாறுவேடம்பூண்டு இவ்வுலகத்தை மீட்டுத் தாபிமானிகையி லகப்பட்டதனால் வெக்கையடைந்து தவித்த பிராணிவர்க்கங்கள் அவ்வழல்தீர்ந்து குளிரும்படி தன் திருவடிகளினால் அளந்த வரலாற்றை ‘ மண்ணிரந்துகாத்தனை பல்லுயிரும் ’ என்றும் அருளிச் செய்தனர். ஸ்தோ

த்ரஞ்செய்துகொண்டு ஆஸ்ரயிக்கவல்லவர்கள், ஆர் யாவர்தாம் [எவருமில்லையென்றபடி] (எ - று.)

“ காவடியேன்பட்ட கடை ” என்று இவ்வாழ்வார் பிரார்த்திக்கவே, ‘இப்படித் தேவதாந்தரங்களை யாச்ரயிப்பார் உண்டோ’? என்று எம்பெருமானுக்குத்திருவுள்ளமாக, இந்தவுலகத்தவர்தேவதாந்தரபஜநஞ்செய்து க்ஷுத்ரபுருஷார்த்தத்தைப் பெற்று அநர்த்தப்படுகின்றனரேயன்றி, உன்னையறிந்து ஆஸ்ரயிக்கிறவர் எவர் இருக்கின்றனர் ? அப்படிப்பட்டவர்கிடையாது, அருமைஎன்கின்றனர். தேவதாந்தரபஜநஞ்செய்து சுவர்க்காதிலோகங்களைப் பெறுவது, பகவானையடைந்துமோக்ஷத்தைப் பெறுவதற்குத்தடை யாகுதலால், ‘ இடைநின்ற இன்பத்தர் ’ என்றது. இனி அமரர் என்பதை எழுவாய் வேற்றுமையாகக் கொண்டு, உரைத்தலும் ஒன்று ; அதுவருமாறு:—அமரர் தேவதாந்தரங்கள், கடைநின்று - உன்வாசலிலேயிருந்து, நாளும் கழல் தொழுது - அவ்வப்போது உன் திருவடிகளைத்தொழுது, (உன்னையே உபேயமாகக் கொள்ளவேண்டியதாக இருக்க அங்ஙனஞ் செய்யாமல்), இடைநின்றஇன்பத்தர் ஆவர் நடுத்தரமான ப்ரயோஜநாந்தரங்களையடைந்து அதனால் இன்பமடைந்திருப்பர் ; நின் அடியை ஓதவல்லார் ஆர் - (உனது திருவடிகள் உபாயமாவதன்றி உபேயமுமாகுமென்று) அநுஸந்திக்கவல்லவர் எவர் ’அப்படிப்பட்டவர் மிகவுந்தர்லபரென்றபடி.

(12) அவரிவரென் றில்லை யரவணையான் பாத
மெவர்வணங்கி யேத்தாதா ரெண்ணில்—பவருஞ்
செழுங்கதிரோ னொண்மலரோன் கண்ணுதலோ னன்றே
தொழுந்தகையார் நாளுந் தொடர்ந்து.

(இ - ள்.) (பின்பார்) அவர் - மநுஷ்யர்களால் ஆச்சிரயிக்கப்படுகின்ற அந்தத்தேவர்கள், இவர் அந்த தேவர்களை ஆச்சிரயிக்கின்ற இந்த மநுஷ்யர்கள் எண்ணில் - ஆராய்ந்துபார்க்குமிடத்து, அரவுஅணையான் திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வாதிகனான எம்பெருமானது, பாதம் - திருவடிகளை, வணங்கி - (தலையாலே) வணங்கி, ஏத்தாதார் - (வாயினால்) ஸ்தோத்ரஞ் செய்யாதவர்கள், எவர் - எவருளர் ? பவரும் செழும் கதிரோன் - பரவின அழகியஆயிரங் கிரணங்களையுடையவனான சூரியனும், ஒள் மலரோன் - அழகிய (எம்பெருமானது திருநாபீ) கமலத்தை இருப்பிடமாகவுடைய பிரமனும், கண்ணுதலோன் - நெற்றிக்கண்ணனான ருத்ரனும், (ஆகிய நாட்டிலுள்ளவரால் ஆச்ரயிக்கப் படுகிறவர்களென்று பிரசித்தரான இவர்கள்) நாளும்நாள்தோறும் தொடர்ந்து தொழும் - (அப்பரமன்) வாழ்கின்ற இடத்தைத் தேடி ஆச்ரயிக்கின்ற, தகையார் அன்றே-ஸ்வபாவமுள்ளவர்களன்றோ ! (ஆகவே, எம்பெருமானை யாச்சிரயிக்கும்விஷயத்தில்) என்று—,இல்லை—ஒருவாசியில்லை (எ-று)

ஆனால், தேவதாந்தரங்களை ஆச்ரயித்தல்தகாதோ என்று ஒரு ஆசங்கை தோன்ற, அந்தத்தேவதாந்தரங்களும் தங்கள் தங்களுடைய அபீஷ்டத்தைப்பெற எம்பெருமானை யாச்ரயிக்கின்றார்களே ; ஆனபின்பு, அவனை யாச்ரயிப்பதன்றோ நமக்கும் அடுக்கும் என்கின்றார். பிரசித்தரான பிரமன்முதலியோரும் அந்தப்பகவானையே ஆச்ரயிக்கும்ஸ்வபாவ



ராயினபின்பு, அவனைவணங்கி ஆச்ரயியாதவர்கள் எவருமில்லை ; சிறியார் பெரியாரென்ற வாசியில்லாமல் யாவரும் அப்பரமனை ஆச்ரயிப்பரென்பதாம். (௧௨)

(13) கொடரெடுத்த மால்யானை சூழ்கயம்புக் கஞ்சிப்
படரெடுத்த பைங்கமலங் கொண்டன்—றிடரடுக்க
ஆழியான் பாதம் பணிந்தன்றே வானவர் கோன்
பாழிதா னெய்திற்றுப் பண்டு.

(இ-ள்.) தொடர் - காற்சங்கிலியை, எடுத்த - (முறித்துக்) கையிற்கொண்டுள்ள, மால் யானை - மதயானையானது, சூழ் கயம் புக்கு - (கரைகாணவொண்ணாதபடி) பரந்த பொய்கையிலே, பிரவேசித்து, படர் எடுத்த பை கமலம் கொண்டு - மலர்ந்து ஓங்கியிருக்கிற பசிய [வாடாமல் அழகிதாயுள்ள] தாமரைப்பூவை (ப் பகவானுக்குச் சமர்ப்பிக்கவேணுமென்று பேராதரத்தோடு) கையிற்கொண்டு,—அன்று இடர் அடுக்க - அந்தநிலையிலே (முதலையின்வாயிலேயகப்பட்டு விடுவித்துக்கொள்ளமுடியாத) பெருந்துன்பமுண்டாக, அஞ்சி - (செவ்வியழிதற்குமுன்னே இந்தமலர்களை எம்பெருமானுக்குச் சமர்ப்பிக்க முடியாமற்போய் விடுமோஎன்று) மனம்பதறி, ஆழியான் - (முதலையைத் துணிக்குங் கருவியான) திருவாழியைக் கையிலேந்தின எம்பெருமானுடைய பாதம் - திருவடிகளை (த்தியானித்து) பணிந்த அன்றே-வணங்கியதனாலன்றோ, பண்டு-முற்காலத்தில், வானவர்கோன் பாழி-நித்தியசூரிகட்கெல்லாந்தலைவனான ஸ்ரீமந்நாராயணனுடைய வாசஸ்தாநமாகியபரமபதத்தை, எய்திற்று - அடைந்தது ; (எ - று)—தான் - அசை.

“ ஒண் மலரோன்கண்ணுத லோனன்றேதொழுந்தகையார் ” என்று கீழே அருளிச்செய்ததில், ‘விலக்ஷணாதிகாரிகள் எம்பெருமானை ஆச்சிரயித்தற்குஉரியவரேயன்றி நம்போன்ற(எளியவர் அப்பரமனை அடையுந்தரத்தினரன்றுபோலும்) என்ற ஒருஅபிப்பிராயம் உண்டாகக்கூடுமாதலால்,கீழ்க்கூறியவாறு பெரியராய் ஆச்சிரயிப்பதல்லாமல் ஜந்மவ்ருத்தாதிகளினால் குறைவுள்ளவர்களுங் கூச்சமற ஆச்ரயிக்கலாமென்ற விஷயத்தை நிலைநாட்டுவதற்காக, ஸ்ரீ கஜேந்த்ராழ்வானது வ்ருத்தாந்தத்தை அருளிச் செய்கின்றனரென்க. பாழி - படுக்கையெனினுமாம். எம்பெருமானருளாற் பரமபதத்தைப் பெறுபவர் அங்கு எம்பெருமானுக்குப் பர்யங்கமாகஅமைபவனான திருவனந்தாழ்வானைத் தமதுபாதங்களால் மிதித்துப்பெறுவ ரென்று நூல்கள் கூறும். (௧௩)

(14) பண்டிப் பெரும்பதியை யாக்கிப் பழிபாவங்
கொண்டிங்கு வாழ்வாரைக் கூறுதே - யெண்டிசையும்
பேர்த்தகர நான்குடையான் பேரோதிப் பேதைகாள்
தீர்த்தகர ராமின் றிரிந்து.

(இ - ள்) பண்டியை வயிற்றை, பெரும் பதி ஆக்கி - பெரியவூர்போலக் கண்டதையுங் கொண்டு நிரம்பச்செய்து வளர்த்து, பழி - அபுத்திபூர்வமாக விளையும் குற்றங்களையும், பாவம் - புத்திபூர்வமாகச் செய்யும் (நிஷித்தாசரணமாகிற) பாவத்தையும், கொண்டு-மேன்மேலும் வளர்த்துக்கொண்டு, இங்கு இவ்வுலகில் வாழ்வாரை (இத்தப்பிரபஞ்சசுகத்

தையே வாழ்வாகநினைத்திருக்கும்ஸம்ஸாரிகளை, கூறுதே - புகழ்ந்து சொல்லாமல், பேதைகாள் —(கண்ணுற்கண்டதைத்தவிர வேறென்றை யறியமாட்டாத) அறிவுகேடர்காள்! (திருவுலகளந்தருளின சமயத்தில்), எண்திசையும் பேர்த்த கரம் நான்கு உடையான் — எட்டுத்திக்குக்களையும் பேர்த்துப் போகடும்படி விம்மிவளர்ந்த நான்கு திருத்தோள்களையுடையவனான ஸர்வேச்வரனுடைய, பேர் - (குணங்களுக்குவாசகமான) திருநாமங்களை, ஓதி - இடைவிடாமற் சொல்லிக்கொண்டு, திரிந்து - நீதில்லாதகன்செறியை யுலகத்தார் யாவரும்அறிய வறுஷ்டித்தவண்ணமாக)எங்குஞ்சஞ்சரித்து, தீர்த்தகரொர் ஆமின் - (உங்கள்சஞ்சாரத்தாலே நாடுமுழுவதும்) பரிசுத்தமாம்படி செய்யவல்லவ ராகுங்கோள்; எ-று

எம்பெருமான் யாவராலும் ஆச்ரயிக்கத்தக்கவ னென்பது பெறபபட்டபின்பு, ஸம்ஸாரிகளை ஸ்தோத்ரஞ்செய்து அதனால் இந்தப்பிரபஞ்சத்திலேயே யுழன்றுகொண்டு தடுமாருமல், அப்பெருமானை ஆச்ரயித்துப் பணிந்து அவனது திருநாமங்களைச்சொல்லி அவ்வழியால் நீங்கள்மாத்திரம் ஈடேறுவதோம் நில்லாமல் உங்களுடைய சஞ்சாரத்தாலே நாடு அடங்கலும் பரிசுத்தமாகும்படி செய்யுங்கோ ளென்று இவ்வுலகத்தவர்க்கு இதனால் உபதேசிக்கின்றன ரென்க. கண்டபொருளையுங்கொண்டு வயிற்றை நிரப்புவதற்காகப் பழிபாவங்களோடு வாழ்கின்ற ஸம்ஸாரிகளைத் துதிப்பவர் பேதைய ரென்க. ஆக்கி கூறுது ஓதி தீர்த்தகர ராமின் என்று முடியும். இங்குப் பழிபாவங்கொண்டு வாழ்வார் - ஸம்ஸாரிகள். அந்த ஸம்ஸாரிகள் அந்தமில்பேரின்பமாகிய பரமபதஸுகத்தின் ஆனந்தத்தைக் கேட்டிருப்பா ராயின் இவ்வுலகவாழ்வை ஒன்ருக்கருதிக் களித்துத் திரியமாட்டார்கள்! அவர்கள்.! தமதுகனவிலும் அவ்வின்பத்தைக் கேட்டறியாமையாலே இவ்வுலக சுகத்தையே பெருவாழ்வாகக் கருதியிருக்கின்றன ரென்பார், அவர்களை 'இங்குவாழ்வார்', என்ருர். பண்டு இப்பெரும் பதியையாக்கி என்று பிரித்து - பழையதான இந்த ஸம்ஸாரத்தை [பிரபஞ்சவாழ்வை] தமக்கு உண்டாக்கி என்றும், முன்பு தொடங்கி இந்த ஸம்ஸாரத்தை வளர்த்து என்றும் கூறுவதுமாம். (௧௪)

(15) திரிந்தது வெஞ்சமத்துத் தேர்கடவி யன்று
பிரிந்தது சீதையைமான் பின்போய்ப் - புரிந்ததுவும்
கண்பள்ளி கொள்ள வழகியதே நாகத்தின்
தண்பள்ளி கொள்வான் றனக்கு.

(இ-ள்.) வெம் சமத்து - கொடிய (பாரத) யுத்தத்திலே, (எதிரிகள் விட்ட அம்பு உடம்பில் ஊடுருவிச்செல்லும்படி கவசந்தரியாமல் தேர்ப்பாகனுகி அருச்சுனன் சொன்னவிடத்திலே), தேர் - தேரை, கடவி - நடத்திக்கொண்டு, திரிந்தது (உ-ம்) - (அலைச்சலாம்படி) இங்குமங்குஞ் சஞ்சரித்ததும், அன்று - (இராமாவதாரஞ்செய்து பெருவப்புடனே காட்டிலே சஞ்சரிக்கின்ற) அப்போதே, மான்பின் - மாயாமிருகமான மாரீசன் பின்னே, போய்—, சீதையை - (ப்ராணனையொத்தவளான) சீதையை



பிரிந்தது (உம்) - பிரிந்து அலைச்சற்பட்டதும், கண் - தரையிலே, பள்ளிக்கொள்ள - பள்ளிக்கொண்டருளும்படி, புரிந்தது உம் - ஆதரித்ததும், (ஆகிய இச்செயல்களையும்),— நாகத்தின் - (மென்மை குளிர்த்தி நாற்றம் என்ற இவற்றை ஸ்வபாவமாகவுடைய) திருவநந்தாழ்வான் மேலே, தண் பள்ளிகொள்வான் தனக்கு - குளிரப்பள்ளி கொண்டருளுகின்ற அதிஸுகுமாரனை பெருமானுக்கு, அழகிய - மிகவும் அழகுடையனவாயிருந்தன ; (எ - று.)

இந்தப் பாசுரத்தில், இவ்வுலகத்தவர் தங்களுடம்பை யாதரித்துப் பேய்களாய்த் திரிய, இவர்களைப் பாதுகாப்பதன் பொருட்டு க்ருஷ்ணனுகத் திருவவதரிப்பதும் ஸ்ரீராமனுகத் திருவவதரிப்பதுமாகி, அப்பரமன் அதிசுகுமாரமான தனது திருமேனி நோவப் படும் அலைச்சலை நினைத்து வயிறுபிடிக்கிருர். கீழ் திருவுலகளந்தருளின விருத்தாந்தம் வந்தமையால், அல்லாத அவதாரங்களிலும் அவ்வெம்பெருமான் ஆச்ரிதரின் பொருட்டாகப் பட்ட வருத்தத்தை நினைந்து வெறுத்துக்கூறுகின்ருரெனினும் ... (பின்னர் அழகிய என்பது - பிறகுறிப்பினுல், மிகவும் அழகற்றனவாக விருந்தன என்ற பொருளைத்தரும். அழகிய - 'அன்' சாரியைபெருத பலவின்பால் முற்று. 'அழகியதே' என்ற ... கு - ஒருமைப் பன்மை மயக்க மென்னவேண்டும். இடப்பொருளதான கண ... வுஞ் சொல், இங்கு தரையென்றபொருளைத்தந்தது. (௧௫)

(16) தனக்கடிமை பட்டது தானறியா னேனும்
மனத்தடைய வைப்பதாம் மாலை - வனத்திடரை
யேரியாம் வண்ணம் இயற்றும் இது வல்லால்
மாரியார் பெய்கிற்பார் மற்று.

(இ - ள்.) தனக்கு - (சேதநனை) தனக்கு, அடிமை - சேஷத்வமென்பது, பட்டது (தன்பக்கல்) அமைந்துள்ளதென்பதை, தான் - அறியான் - ஏனும்-(உள்ளபடி) தெரிந்துகொள்வதற்கு வல்லமையற்றவனுக இருந்தனுனும்,—மாலை - (நம்முடையசேத்தை நாம் பெறவேணுமென்று மேல்விழுந்துசேதநரை அடிமைகொள்வதற்கு) விருப்பமுள்ளவனை பெருமாளை, மனத்து - மனத்திலே, அடைய - வந்துசேரும்படி, வைப்பது - இடங்கொடுத்துவைத்துக் கொள்வது, ஆம் - தகும்! (இவனுக்கு இவ்வளவு ருசிமாத்திரம் உண்டானுல் விரோதியைப் போக்கித் தன்னைத்தருகை அவனுக்குப்பாரம்; அது எங்ஙனேயென்னில்,—) வனம் திடரை - காடெழுந்து கிடக்கிற (மிக்கவன்மையையுடைய) மேட்டை, (பெய்யும் மழைநீர் புறம் புபோகாமல் தடையறவந்து புகும்படி காட்டையழித்து வெட்டிப் பள்ளமாக்கி) ஏரி ஆம் வண்ணம் - ஏரியாகும்படியாக, இயற்றும் இது அல்லால் முயன்று செய்விக்கையாகிற இவ்வளவுமாத்திரம் செய்யலாமேதவிர, மற்று - பின்னும், மாரி - மழையை, பெய்கிற்பார் - பெய்யும்படி செய்விக்கும் வல்லமையுள்ளவர், யார் - யாவருளர்? (எ - று.)

நம்மைப்பெறவேணுமென்றே எம்பெருமான் பற்பலவவதாரங்கள்யெடுத்துக் க்ருஷி செய்வதனுல், நாம் சேதநராயிருப்பதற்காக, அவனைப்பெறவேணுமென்ற ருசிமாத்திரம்

நம்மிடத்து வேண்டுவதேதவிர, நாம் பேற்றுக்கு முயற்சிசெய்ய வேண்டுவதில்லையென்று இதனால் அருளிச்செய்கின்றார். காடுகளைத்து பெய்யும்மழைநீர்வந்துதங்கும்படி வலியமேட்டை வெட்டிப்பள்ளமான ஏரியாகச்செய்விக்க அது ஏரியாக அமைந்திருப்பது தவிர, அங்கு மழைபெய்யுமாறு ஏரியாய்செய்யமுடியுமோ? முடியாது! அங்கு மழைபெய்விப்பது மழைக் கடவுளின் செயலேயாகும்; அதுபோலவே, மனத்தில்எம்பெருமான்வந்துதங்கும்படி விலக்காமையுடன் இருக்கவேண்டுவதேநாம் செய்யக்கூடிய செயல் அங்கேவந்து இடைவிடாதுதங்கும்படி அப்பெருமானைச் செய்விப்பதென்பதோ நமக்குஇயலாது: ஆதலால், விலக்காமை யென்ற இவ்வளவு மாத்திரம் நம்மிடத்து உண்டானால் அதுவே பற்றாச ஆகக்கொண்டு நம்முடைய விரோதிகளைப் போக்கித் தன்னைத்தருகை அவ்வெம்பெருமானுக்குப் பொறுப்பாகு மென்பதாம். ஏரி மழையைத்தேடித் தன்னை நிரப்பிக்கொள்ளும்போது தான் ப்ராப்தி. இந்தச்சேதனனால் உண்டாக்கிக்கொள்ள முடியும்; அது பர்ஜந்யனுடைய செயலேயாவதுபோல, இதுவும் எம்பெருமானுடைய செயலேயாகு மென்றவாறு. தான் எம்பெருமானுக்கு அடிமையென்பது - ஆசார்ய ஸேவையாலும், ப்ரமாண ப்ரஸித்தியாலும் இந்தச்சேதநன் உணரக்கடவனென்பர். இனி, இந்தப் பாசுரத்திற்கு—, அவ்வெம்பெருமான் சேஷி; தான் சேஷன், என்னும் இவ்விஷயத்தை இந்தச்சேதநன் அறிகின்ற விவேகம் இல்லாதவனாகவே யிருந்தாலும், இவனுக்கு அவ்வெம்பெருமானிடத்து ருசியில்லாம லிருந்தாலும், 'யத்யத் ஆசரதி ச்ரேஷ்ட: தத்ததேவ இதரே ஜநா:' [பெரியோன் எந்த எந்தச் செயலைச் செய்கிறானோ அந்தச்செயலையே ப்ராக்ருதரான ஜனங்கள் செய்கிறார்கள்]' என்பதற்கு ஏற்ப, பெரியோர் செய்யும் முறைமையைக் கண்டாகிலும் ஸர்வேச்வரனை ஹ்ருதயத்திலே கொண்டு இந்தச் சேதநன் த்யானிக்கக்கடவன். இவ்வளவு மாத்திரத்தைக்கொண்டு விரோதியைப்போக்கி ஸ்வப்ராப்தியையும் எம்பெருமான் செய்துதருவ னென்று தாத்பர்யஞ் சொல்லுதலும் உண்டு.

இனி, இந்தப்பாசுரத்திற்கு மற்றோர் உரைவருமாறு:— இந்தச்சேதநன் தான் அடியவனென்பதை அறிவதற்கு அசக்தனாயிருக்கும்போது ஸர்வசக்தியை மனத்தில் வைத்து த்யானஞ்செய்வனமே; இது எங்கேனும் கூடுமோ? வனத்திடரை ஏரியாம் வண்ணம் இயற்றும் இதுதான் இந்த ஒருசேதநனால் செய்யப்போமோ? [அந்தச்செயலும் பகவத் ஸங்கல்பத்தால் பலர் சேர்ந்தால்தான் இது நிறைவேறும்]; அதுவல்லாமல் அந்த ஏரியில் மாரிபெய்கிறபார் யார்? ஏரியைக் கல்லுவிப்பதும் மழைபெய்விப்பதும் இரண்டும் எம்பெருமான் ஸங்கல்பத்தாலேயே இனிது நிறைவேறுவதுபோல், இந்தச்சேதநனுக்கு அவித்யாகர்மா வஸநாதிகளைப்போக்கி ருசியுண்டாவதும் தன்கல்யாணகுணங்களை இவனிடத்துப்பொழிவதும் ஆகியஇரண்டும் அவ்வெம்பெருமானுடைய கிருபையினாலேயே நேருமென்பது: ஆம்- "பொய்த்தேர்வில்லிகள் போவாராம்" என்ற இடத்திற்போலப் பழித்தற்பொருளில் வந்தது. (௧௬)

(17) மற்றாரியலாவார் வானவர்கோன் மாமலரோன்
சுற்றும் வணங்குந் தொழிலானை - ஒற்றைப்

186729

## ஸ்ரீ வைஷ்ணவ வடகலை—தென்கலைகள் ஒன்றுக்கொன்று விரோதமா?

( சுதேசமித்ரன் 25. 12. 1914. )

தென்னாடுகளில் தென்கலை வடகலை என்கிற வகுப்புகளுக்குள் வீண் மத பேதம் மிக விஸ்தாரமாய்ப் பரவி சச்சரவிட்டுக் கொண்டு வருகிறார்கள் அல்லவா? இதன் உண்மையை பக்ஷபாதமின்றி யோசித்துப் பார்த்தால் அணு அளவேனும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ள நிமித்தம் இல்லை. ஏனென்றால்:— இவ்விருதரத்தார்களும் உபயவேதாந்த ப்ரவர்த்தகத்வம் தங்களுக்கு உண்டென்று சொல்லுகிறார்கள். உபய வேதாந்தம் என்பது கீர்வாண வேதாந்தமும் திராவிடவேதாந்தமும். அதில் கீர்வாண வேதாந்தம் என்பது ஈசாவாஸ்யாதி உபநிஷத்பாகங்கள் என்றும், திராவிட வேதாந்தம் என்பது நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி முதலிய திவ்ய ப்ரபந்தங்கள் என்றும் சொல்லுகிறார்கள். இதுவும் அன்றி இவ்விருதரத்தார்களும் ஸ்ரீ பாஷ்யகாரருடைய சிஷ்யர்களாயிருக்கிறார்கள். ஸ்ரீ இராமானுஜாசாரியரும் கீர்வாண வேதாந்தத்தை பிரும்ம சூத்திர பாஷ்யமுகமாக அதன் அர்த்த பாகங்களை எல்லாரும் அறிந்து கொள்ளும்படி தாம் வெளியிட்டதுபோல், திராவிட வேதாந்தத்தையும் திருக்குருகைப்பிரான் பிள்ளான்என்கிற தமது சிஷ்யரைக் கொண்டு ஆறாயிரப்படி என்கிற வியாக்கியான மூலம் தெரியபடுத்தியிருக்கிறார். இதன் பிறகு கீர்வாண வேதாந்தத்திற்கு ஸ்ரீ ராமானுஜர் அருளிய அர்த்தபாகங்களை நன்றாய் அறிந்துகொள்ள ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யர் ஸ்ரீ மத் வேதாந்த தேசிகர் முதலியவர்கள் விசேஷித்து க்ரந்த முகமாக எல்லாரும் தெரிந்து கொள்ளும்படி அனுக்ரஹித்து இருக்கிறார்கள். அதுவுமன்றி, ஸ்ரீ மத் வேதாந்த தேசிகர் பிரசுரித்து மேற்படி கிரந்தங்களைப் பரவச்செய்திருக்கிறார். திராவிடவேதாந்தத்திற்கு திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிய அர்த்த பாகங்களை பெரிய வாச்சான் பிள்ளை நம்பிள்ளை முதலியவர்கள் விசேஷித்து கிரந்தமுகமாக அறிந்துகொள்ளும்படி அனுக்கிரஹித்திருக்கிறார்கள். மேற்படி திராவிட வேதாந்தத்தையே விசேஷித்துப் பிரசாரம் பண்ணினவர் ஸ்ரீ மான் மணவாள மகாமுனிகள். இப்படி இவ்விருவர்களும் செய்திருக்கிற பெரிய உதவியைக் கொண்டு ஸ்ரீ வைஷ்ணவர்சார்யத்வ பதம் நிர்வஹித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். தென்கலை வடகலை இருதிறத்தார்களுக்குமே இருவித வேதாந்தமும் அநந்யாபேக்ஷிதமா யிருக்கிறது.

இந்த இரண்டு ஆசார்யர்களும் ஒருவருக்கொருவர் மதவிஷயத்தில் விரோதமான அபிப்ராயத்தை கொண்டவர்களாக எந்த கிரந்தங்களிலும் தென்படவில்லை. இருவர்களும் பகவத்ராமானுஜ பக்தர்களா யிருந்தது மன்னியில், ஆழ்வாராச்சாரியர் திருவடிகளை வணங்கினவர்கள்.

பிறகு உண்டான வித்வான்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களுக்குத் தோன்றினபடிக்கு கிரந்தங்களின் தாத்பரியத்தை பேதப்படுத்தி யெழுதி, முன்னிருந்த ஆசாரியர்களை நிந்திக்கும் படியான நிலைமையில் கொண்டுவந்துவிட்டார்கள்.

இப்பால் விசேஷமாய் கிரந்தபரிசீலனை செய்திருந்த உபயவேதாந்த காலக்ஷேபகர்கள் மதத்துவேஷம் கூடாதென்றும், கொஞ்சம் சம்ப்ரதாய விஷ

யத்தில் வித்தியாசம் தென்பட்டால் அவரவர்கள் ஆசார்யர்கள் நியமித்திருந்தபடிக்கு அநுஸந்தானம் செய்துகொண்டு ஒருவருக்கொருவர் சச்சரவு இல்லாமல் இருப்பதே நலமென்றும் சொல்லுகிறார்கள். இதுவே உண்மை என்றும் சரி என்றும் படுகிறது.

உபயவேதாந்தக்ரந்தங்களைச் செவ்வையாகப் பரிசீலனை செய்யாத வெகு பேர் பிறர் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு தென்கலை வடகலை என்று வீண் சச்சரவு செய்து கொள்கிறதும், அதை அபிவிருத்தி செய்துவர உத்தியோகஸ்தர் முதலிய கனவான்கள் பொருள்உதவி செய்வதும் நியாயமாய்க் காணப்படவில்லை.

எல்லாருடைய ஜீவாத்மாக்களும் சேரவேண்டிய இடம் ஒன்றேயுள்ளது. சரீரம் அநித்தியமானது. ஆகையால் நல்வழி மார்க்கத்தை யநுஸரிப்பதில் ஒருவருக்கொருவர் பொறாமை உதவாது. அதைப் படிப்பில்லாத ஜனங்கள் விஸ்தாரப்படுத்தப் படித்திருக்கிற கனவான்கள் இடமும் கொடுக்கக் கூடாது.

கிருஷ்ணயோகி.


## Ready for Sale.

வேதாந்ததீபிகை ஆபீஸில் கிடைக்கக்கூடிய புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. வேதாந்த தீபிகை பழய ஸஞ்சிகைகள் வாலியூம் 1க்கு - 12 ஸஞ்சிகைகளுக்கு | 3 | 0 | 0 |
| பைண்டு வாலியூம். | 3 | 8 | 0 |
| 2. ஸ்ரீ ஸித்தார்த்த ஸங்க்ரஹம்—ஸ்ரீ. உ.ப. இஞ்சிமேடு ரெங்கநாதாசாரியருடைய வ்யாக்யாநத்துடன். | 0 | 4 | 0 |
| 3. ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம். | 0 | 4 | 0 |
| 4. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம். ஸ்ரீ.உ.ப. பண்டிதபூஷணம் வித்வான் சேட்டலூர் நரஸிம்மாசாரியர் வ்யாக்யானத்துடன் | 0 | 8 | 0 |
| 5. ஜநகநந்தினி—ஸ்ரீ. உ. ப. தி. த. ரங்காசார்யரால் செய்யப்பட்டது. | 1 | 0 | 0 |
| 6. மும்மணிக்கோவை—ஸ்ரீ. உ. ப. பண்டிதபூஷணம் வித்வான் சேட்டலூர் நரஸிம்மாசார்யர் வ்யாக்யானத்துடன் | 0 | 8 | 0 |
| 7. கற்புநிலை (பாதிவ்ரத்யம்) ஸ்ரீ. உ.ப. வித்யாநிதி க்ருஷ்ணமாசார்யரால் செய்யப்பட்டது. | 0 | 2 | 0 |
| 8. விவாஹரஹஸ்யம்—ஸ்ரீ. உ.ப. வித்யாநிதி க்ருஷ்ணமாசாரியரால் செய்யப்பட்டது. | 0 | 4 | 0 |
| [ஸம்ஸ்க்ருத புஸ்தகங்கள் தேவநாகர எழுத்தில்.] | | | |
| 9. ந்யாயபரிசுத்தி. | 3 | 0 | 0 |
| 10. கத்யத்ரயம், ஸ்ரீதேசிகன் பாஷ்யத்துடன். | 1 | 0 | 0 |

The Secretary, Sri Vais nava Siddhanta Sabha,
2/11, Adiappa Mudaly Street, Purasawalkam,
Vepery Post, (MADRAS. N. C.)